தேசபக்தர் மூவர்

நாமக்கல் கவிஞர்

MADURAI UNIVERSITY LIBRARY
24 JUN 1970
MADURAI.

இன்ப நிலையம்
மயிலாப்பூர் : : சென்னை-4.

முதற் பதிப்பு: அக்டோபர், 1953.
இரண்டாம் பதிப்பு: மே, 1954.
மூன்றும் பதிப்பு: டிசம்பர், 1962.
நான்காம் பதிப்பு: 1964.
உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை ரூ. 1-25.

பொருளடக்கம்

1. வ. உ. சிதம்பரம் பிள்ளை.
2. எஸ். சத்தியமூர்த்தி ஐயர்.
3. ம. பொ. சிவஞான கிராமணியார்.

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ், சென்னை-1.

பதிப்புரை

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் எண்ணற்ற தேச பக்தர்கள் ஈடுபட்டு தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்தனர். அந்த தியாகிகள் பரம்பரையில் தமிழ் நாட்டில் தோன்றிய தேசபக்தர் மூவரைப் பற்றியே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் சுதந்திரப் போராட்டப் பருவத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

முதற் பருவத்தில் அந்தப் போராட்டத் தியாகிகள் பரம்பரையில் தோன்றி, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் வீரப் புரட்சி விளைவித்த முதல்வர் வ. உ. சிதம்பரனார். அவர் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை, பேச்சால் மட்டுமல்ல—ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பல் ஓட்டிய செயல் வீரராய் விளங்கி "கப்பலோட்டிய தமிழன்" என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

இரண்டாவது பருவத்தில் திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் சேவையைக் குறிப்பிடலாம். போராட்ட காலத்திலும் சட்டசபைத் தேர்தல் காலங்களிலும், அவரது சொல்லின் திறமையால் மக்களைச் செயலுக்குத் தூண்டி வெற்றி கண்ட வீரர். சட்ட சபையிலும் அவர் செய்த சொற்பொழிவுகள் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவை.

மூன்றாவது பருவத்தில் இன்று நம்மிடையே வாழ்ந்து வரும் அரசியல் தலைவர்களில் குறிப்பிடத் தகுந்த சிலரில் முதன்மையானவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் ஆகும். வ. உ. சி. யின் போராட்ட குணமும், திரு. சத்திய

மூர்த்தி அவர்களின் நாவன்மையும் ம. பொ. சி. யிடம் ஒருங்கே அமைந்திருக்கின்றன. முன்னவர் இருவரும் அடிமை இந்தியாவிலேயே மறைந்துவிட்டனர். ம. பொ. சி. சுதந்திர இந்தியாவில் வாழ்ந்து தமிழகத்தில் தமிழரசு அமைய வேண்டும்; தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழரசு இயக்கம் கண்டு பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் வழிகாட்டியாக வாழ்ந்து வருபவர்.

திரு. வ. உ. சி.—சத்தியமூர்த்தி—ம. பொ. சி. ஆகியோர் தமிழகத்தின் குறிப்பிடத் தகுந்த தேசபக்தர் மூவர் ஆவர்.

அதே போராட்டப் பரம்பரையில் தோன்றி போர் வீரர்களுக்கு உணர்ச்சி யூட்டக்கூடிய எண்ணற்ற கவிதைகளை இயற்றித் தந்த பெருமை நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு உரியதாகும். அன்னாரின் "கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது" என்ற பாடலைப் பாடாத தேசபக்தரே இருக்க முடியாது.

திரு. வ. உ. சி.—சத்தியமூர்த்தி—ம. பொ. சி ஆகிய மூவரைப் பற்றியும் நாமக்கல் கவிஞர் தனித்தனியே எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். அவற்றைப் புத்தக உருவில் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதில் அடங்கி யுள்ள கட்டுரைகள் மேற்கூறிய மூவரைப்பற்றிய வாழ்க்கை வரலாறு அல்ல. குணச் சித்திர விமர்சனக் கட்டுரைகளே யாகும்.

இந் நூலை வெளியிடும் நல்வாய்ப்பளித்த நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு எங்கள் இதய பூர்வமான வணக்கமும் நன்றியும் உரியதாகும்.

சென்னை-4,
10—10—53.

சோம. சுவாமிநாதன்,
இன்ப நிலையம்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனுர்

'கப்பலோட்டிய தமிழன்' என்று சொன்ன உடனேயே இப்போதுள்ள தமிழ்நாட்டு மக்களுள் பெரும்பாலோர்க்குக் காலஞ்சென்ற உயர்திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் நினைவுதான் உதிக்கும்.

தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் தமிழர்களுடைய பழங்காலப் பெருமைகளைப் பற்றிச் சிந்தனை செய்யக்கூடிய வெகு சிலருக்கு, 'கப்ப லோட்டிய தமிழன்' என்று சொல்லும்போது நெடுங் காலத்துக்கு முன்னுல் தமிழ்நாட்டு மக்கள் கடலோடும் தொழிலில் கைதேர்ந்தவர்களாக இருந்ததும், அவர் கள் கப்பல் ஓட்டிக் கடல் கடந்து எகிப்து, கிரேக்க தேசம், ரோமாபுரி முதலான அன்னிய நாடுகளில் வாணிபம் செய்து ஆதிக்கம் அடைந்திருந்த சரித்திரச் சிறப்புகளும் கனவுபோல் நினைவுக்கு வரும். பழங் காலத்தில் தமிழர்கள் கப்பலோட்டிக் கடல் கடந்து, அன்னிய நாடுகளிலிருந்து ஏராளமான செல்வத்தை யும் கலையறிவையும் சேகரித்து வந்து தமிழர்களுடைய தனி நாகரிகத்தை வளர்த்திருக்கிறதைப் பற்றித் தனியே ஒரு புத்தகம் எழுதித் தருக்கும் அடையலாம். எனினும் இந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' கதை அந்தப் பழைய சரித்திரத்தைப் பற்றியதல்ல. ஆனுலும் இங்கே சொல்லபடுகிற 'கப்பலோட்டிய தமிழ'னுக்கும்,

தம் முன்னோர்களாகிய பண்டைத் தமிழர்கள் கப்ப லோட்டிச் செல்வத்தைப் பெருக்கிக் கலைகளை வளர்த்து நல்லரசு நடத்திய வல்லரசுகளாக வாழ்ந்தார்கள் என்ற நினைவும், அவருடைய கப்பலோட்டும் முயற்சி களின் மூலகாரணங்களில் ஒன்றாக இருந்தது என்பதை அவருக்குப் பல காரியங்களிலும் பக்க பலமாக உதவிவந்த காலஞ்சென்ற ஸ்ரீ சுப்ரமண்யசிவா அவர்கள் என்னிடம் சொன்னது இன்னும் என் ஞாகத் தில் இருக்கிறது.

சிதம்பரம் பிள்ளையவர்களை நினைக்கும்போதே லோகமான்ய பால கங்காதர திலகர்பிரான், அரவிந்த கோஷ், சுப்ரமண்ய சிவா, சுப்ரமண்ய பாரதி, வ. வே. சுப்ரமண்ய ஐயர், விபின சந்திரபாலர், லஜபதிராய் முதலான பெரும் பெயர்கள் ஒருங்கே நம் மனதில் ஓடிவரும். இவர்கள் அனைவரும் அரசியல் அபிப்பிரயத் திலே ஒரே இனத்தைச் சேர்ந்து உழைத்தவர்கள். விபின சந்திரபாலர் பிற்காலத்தில் மிதவாதியாக இருந் ததையும் அரவிந்தர் அரசியலைத் துறந்ததையும் இங்கே கருதவேண்டியதில்லை. சிதம்பரம் பிள்ளையவர்களை எந்தெந்தக் காரணங்களுக்காக நாம் போற்று கின்றோமோ அத்தக் காரணகளிலெல்லாம் மேற் சொன்னவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையை மேற்கொண்டிருந்த ஒரு குடும்பம் என்று கூசாமற் சொல்லலாம்.

தமிழ்நாட்டில் தேசிய உணர்ச்சியை ஊட்டி வளர்த்த தந்தை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை என்பதும் கூட அவருடைய புகழுக்குப் போதாது. பிள்ளையவர் களோடு நான் நெருங்கிப் பழகினவன் அல்லவென்றா லும் அவருடைய உணர்ச்சி உலகத்தில் நான் பல நாள் பழகினவன். காந்தியடிகள் காங்கிரஸ் காரியங் களை மேற்கொள்ளும் வரையிலும் நான் திலகரையே தெய்வம்போற் கொண்டாடினவன். வடநாட்டுக்குத் திலகர் என்றால் தென்னாட்டிற்குச் சிதம்பரம் பிள்ளை

தான். 1907-ல் சூரத்தில் நடந்த காங்கிரஸில் அமிதவாதக் கட்சியென்று அப்போது சொல்லப்பட்ட திலகர் கட்சிக்கும் மிதவாதக் கட்சியென்று சொல்லப் பட்ட மேத்தா—கோகலே கட்சிக்கும் சச்சரவு உண் டாகி, மிதவாதத் தலைவருள் ஒருவரான ஸ்ரீ ராஷ் பிகாரி கோஷ் அவர்களுடைய தலைமைப் பிரசங்கம் நிகழாமலே காங்கிரஸ் கூட்டம் குழப்பத்தில் கலைந்து போனதையும், அப்படிக் கலைந்துபோனது திலகர் கட்சிக்கு வெற்றி என்பதையும் அந்த வெற்றிக்குத் திலகருக்குத் துணையாக நின்றவர் நம் சிதம்பரனுர் என்பதையும் கொண்டாடிக் கூத்தடித்த இளைஞர்களுள் நானும் ஒருவன். நெருங்கிப் பழக நேரவில்லையென்ரு லும் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நன்ருக அறிந்து அனுபவித்துக் கொள்ளப் போதுமான சந்தர்ப் பங்கள் இரண்டு முறை கிடைத்தன.

முதல் முதலில் அவரை நான் காணக் கிடைத்தது சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போன ரயில் வண்டிப் பிரயாணத்தில். காந்தியடிகளின் ஒத்துழை யாமைத் தீர்மானத்தை ஆலோசிப்பதற்காக 1919-ல் கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூட்டப்பட்டது. அந்தத் தீர்மானத்தில்தான் சாத்வீகத்தையும் சத்தியத் தையும் அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கூடங் களைப் பகிஷ்கரித்தல், பட்டம் பதவிகளைத் துறத்தல், நீதி மன்றங்களுக்குப் போவதை நீக்குதல், சட்டமறுப்பு நடத்துதல் முதலான பல முறைகளைப் படிப்படியாக நடத்துவது என்ற கொள்கையைக் காங்கிரஸ் மேற் கொண்டது. இந்தத் தீர்மானத்துக்கு வெகு பலமான எதிர்ப்புகள் திரண்டன. தீவிரவாதிகள் என்று சொல்லப் பட்ட எல்லோரும் இதற்கு விரோதம். அந்த எதிர்ப்புக் குக்காரணம் பட்டம் பதவிகளை விட்டுவிட வேண்டுமே என்பதோ, சட்ட மறுப்புச் செய்து கஷ்டப்பட வேண்டுமே என்பதோ அல்ல. பின் என்னவென்ருல் அரசியல் சதுரங்கச் சண்டையில் சத்தியத்தையும்

அஹிம்சையையும் கட்டாயமாக்கக் கூடாது என்பதே. அப்படிச் சத்தியத்தையும் சாத்வீகத்தையும் கட்டாயப் படுத்தி மேற்கொள்ளச் செய்தால் நாட்டில் ஆண்மையும் தைரியமும் அருகிப் போய்விடும் என்றே தலைவர்கள் அப்போது நினைத்தார்கள். அன்றியும் போராட்டங்களில்—அது அரசியல் போராட்டமானாலும் சரி அல்லது அன்னியப் போராட்டமானாலும் சரி—'சாம, பேத, தான, தண்டம்' என்று சொல்லப்படுகிற நான்குவித உபாயங்களையும் சமயத்துக் கேற்றபடி உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல் வெறும் சத்தியம் சாந்தம் என்ற வைதிக மனப்பான்மை உதவாது என்பது எதிர்ப்பாளர்களுடைய வாதம். சாம, பேத, தான, தண்டம் என்ற சதுர்வித உபாயங்களைப் பற்றிக் கேட்டுக் கேட்டுச் சொல்லிச் சொல்லிப் பரம்பரையாகப் பழகிவிட்ட பலருக்கும் இந்த வாதம். சரியானதாகத் தோன்றியதால் அந்த எதிர்ப்பு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. இந்த எதிர்ப்பின் பிரதான தலைவர்கள் திலகருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள். ஸ்ரீ திலகர் அப்போது இல்லை. அவர் இறந்து பல மாதங்களாகி விட்டன. திலகர் உயிருடன் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடம் கொடுக்கவே மாட்டார் என்பதே இவர்களுடைய நம்பிக்கை. இந்த எதிர்ப் பாளர்களுடைய முன்னணியில் நமது சிதம்பரம் பிள்ளையவர்கள் விளங்கினார். "எங்கள் மன்னன் திலகர் உயிருடன் இருந்தால் இந்தப் பேடித்தனமான தீர்மானத்தைக் கொண்டுவர இந்தக் காந்தி துணிவாரா?" என்று சிதம்பரம் பிள்ளை கர்ஜித்தார்.

மதிக்கத் தகுந்த காங்கிரஸ் தலைவர்களுள் மிகப் பெரும் பகுதியினரும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள் என்றாலும் தீர்மானம் நிச்சயமாக நிறைவேறிவிடும் என்று எதிர்ப்பாளர்கள் ஏங்கும்படியாக நிலைமை இருந்தது; எப்படியென்றால் அப்போது நடந்துகொண்

டிருந்த 'கிலாபத்' கிளர்ச்சிக்கு காந்தியடிகள் பரிபூரண ஆதரவு காட்டி இந்திய முஸ்லிம்களுடைய அளவுகடந்த அபிமானத்துக்குப் பாத்திரமாகி விட்ட படியால் என்றுமில்லாத அளவில் ஏராளமான முகம்மதிய சகோதரர்கள் காங்கிரசில் அங்கத்தினர் களாகச் சேர்ந்து அந்த விசேஷ காங்கிரசுக்குப் பிரதி நிதிகளாக வந்தார்கள். இந்துக்களும் மகம்மதியர் களும் ஏகமனத்தாராக அந்தக் கல்கத்தா காங்கிரசில் கலந்திருந்த கண்கொள்ளாக் காட்சியைப்போல இன் னெருதரம் எங்கேயாவது பார்க்க முடியுமா என்று என் மனம் பலதடவை பதைபதைப்பதுண்டு.

இந்தக் கல்கத்தா விசேஷ காங்கிரசுக்குச் சென்னையிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் சென்றார் கள். அந்தக் காங்கிரஸ் கூடுவதற்குப் பல தினங் களுக்கு முன்னலிருந்தே தினந்தினம் போகிற கல்கத் தா ரயில் வண்டிகளில் பார்வையாளர்களும் பிரதிநிதி களும் பயணமானர்கள். அந்தச் சாதாரண வண்டி களில் போனவர்கள் போக அந்தக் காங்கிரசுக் கென்றே இரண்டு தனி வண்டிகள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. ஒன்று 'காங்கிரஸ் ஸ்பெஷல்', மற் றென்று 'கிலாபாத் ஸ்பெஷல்'. இந்த இரண்டிலும் ஹிந்துக்களும் மகமதியர்களும் வித்தியாசமில்லாமல் கலந்து சென்றார்கள். 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டியில் மகமதியர்களைக் காட்டிலும் ஹிந்துக்களே அதிகமாக இருந்தார்கள். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஏறத்தாழ எல்லோரும் அந்த வண்டியில்தான் இருந் தார்கள். தென்னட்டுத் திலகரான சிதம்பரம் பிள்ளை யவர்களும் அதிலேதான் வந்தார். நாமக்கல்லிலிருந்து ஸ்ரீ நாகராஜ ஐயங்காரும், ஜனுப் பீர்பாட்சா சாஹிபும் நானும் இன்னெருவரும் பிரதிநிதிகளாக நாமக்கல் கிலாபத் கமிட்டியின் ஆதரவில் அனுப்பப்பட்டோம். நாங்களும் அந்த 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டியில் தான் பிரயாணம் செய்தோம்.

சென்னையிலிருந்து கல்கத்தா சேருகின்ற வரையில் ரயில் வண்டியிலும் கல்கத்தா சேர்ந்தபின் எங்களுடைய ஜாகையிலும் காங்கிரசில் காந்தியடிகளின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்ட நிமிஷம் வரையிலும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள் ஓயாமல் அந்தத் தீர்மானத்துக்கு விரோதமான வாக்களிக்க வேண்டுமென்று சென்னை மாகாணப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே வேண்டிக்கொண்டார். ரயில் வண்டித் தொடரிலுள்ள ஒவ்வொரு வண்டியாக 'கம்பார்ட்மெண்ட், கம்பார்ட்மெண்டாகச்'ச் சென்று ஸ்ரீ பிள்ளையவர்கள் பிரசாரம் செய்தார். அந்த ரயிலில் பிரயாணம் செய்த பிரதிநிதிகள் ஹிந்து, மகம்மதிய, கிறிஸ்துவ 'எல்லோரும் ஓர் குலம்', 'எல்லோரும் ஓர் இனம்', 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற ஒரே உணர்ச்சியுடன் பிரயாணம் செய்ததால் சாப்பாட்டு நேரம், படுக்கை நேரம் என்று தங்களுடைய 'கம்பார்ட்மெண்ட்'டுக்குப் போகவேண்டுமென்ற அகத்தியம் இல்லாததால் அங்கங்கே உணவருந்தி, அங்கங்கே தூங்கி, அங்கங்கே பேசிக்கொண்டே இந்தப் பிரசாரத்தை திருப்பித் திருப்பி இடைவிடாது ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை செய்துகொண்டே வந்தார்.

நானிருந்த வண்டிக்கும் வந்தார். சிதம்பரம்பிள்ளை மிகவும் இனிமையான சல்லாபி. புதிதாக யாரைச் சந்தித்தாலும் அவர்களுடைய ஊர், பேர், தொழில், குடும்ப நிலை முதலான க்ஷேமங்களைப் பற்றிக் கொஞ்சமாவது பேசிவிட்டுத்தான் பிறகு வந்த காரியத்தை வாதிப்பார். வாதிப்பதில் மிக்க வல்லவர். பலமான எதிர்வாதம் ஏற்பட்டுக் கடுமையான பதங்களை பிரயோகித்துவிட்டாலும் கோபங்கொள்ளாமல் முறை தவறிப் பேசாமல் நிதானமாக நியாயங்களை விளக்குவார். நாமக்கல் பிரதிநிதிகளாகிய எங்களுடன் பேச வந்தார். ஒரு நண்பர் எங்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். என்னைப்பற்றிச் சொல்லும்போது

நான் கவி பாடத் தெரிந்தவன் என்றும் சொல்லப் பட்டது.

நான் திலகர் இறந்து போனதைப்பற்றிப் பாடி யிருந்த இரங்கற் பாட்டுக்களின் அச்சடித்த பிரதிகள் எங்களுடன் இருந்தன. திலகரைப்பற்றிய புகழுரை என்ருல் சிதம்பரனுருக்குத் தேவாமிர்தம் போன்றது என்பதை அறிந்த ஒரு நண்பர் 'நீங்கள் திலகரைப் பற்றிப் பாடிய சரம கவிகளின் பிரதி இருக்கிறதா?' என்று என்னைக் கேட்டார். நான் பதில் சொல்லி முடிவதற்குள் எங்களுடன் வந்திருந்த வரதராஜ முதலி யார் என்ற நாமக்கல் அச்சுக்கூடச் சொந்தக்காரர் (அவர்தான் அந்தப் பாட்டுக்களை அச்சிட்டவர்) எங்கள் மூட்டைகளில் இருந்த அந்த திலகர் சரம கவி களின் பிரதி ஒன்றைச் சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். அதை வாங்கின பிள்ளையவர்கள் அதிலிருந்த முதல் பாட்டைப் படித்தார். அது:

இடியது விழுந்ததோதான் இரும்பினைப்
பழுக்கக்காய்ச்சி இருசெவி நுழைத்ததோதான்

....

....

திடமுள தீரவீரன் திலகனுர்
மாண்டாரென்ற தீயசொல் கேட்டபோது

அதைமட்டும் படித்துவிட்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர் கள், "ஆம், ஆம். உண்மை உண்மை. இடிதான் விழுந்துவிட்டது. இடி விழுந்துதான் நாம் இப்படிக் கதிகலங்கித் தடுமாறுகின்ருேம்" என்று ஆரம்பித்து ஒரு நீண்ட பிரசங்கம் செய்துவிட்டு, "இந்தப் பாட்டுக்களை நிதானமாகப் படித்துப் பார்க்கிறேன்" என்று அதை மடித்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு தாம் வந்த காரியமாகிய காந்தி தீர்மான எதிர்ப்புக்கு எங்கள் ஓட்டுக்களைக் கோரினுர். நாமக்கல்லிலிருந்து போன நாங்கள் அத்தனை பேரும்

காந்தியின் தீர்மானத்தை ஆதரிக்கவென்றே புறப்பட்டவர்கள். நாங்கள் அப்படிச் செய்வோம் என்று நம்பியும் செய்ய வேண்டுமென்று கோரியுமே கிலாபத் கமிட்டியார் எங்களை அனுப்பி யிருந்தார்கள். அப்படியிருக்க நாங்கள் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை எப்படி ஆதரிப்போம்? ஸ்ரீ நாகராஜ ஐயங்கார் பேசவில்லை. நான் இரண்டொரு சந்தேகங்களை மட்டும் கேட்டுவிட்டு எதிர்வாதம் செய்யாமல் சும்மா இருந்துவிட்டேன். ஸ்ரீ வரதராஜ முதலியார் மட்டும் பிள்ளையவர்களை எதிர்த்து வாதாடினார். கடைசியாக எங்கள் கோஷ்டியிலிருந்து தம்முடைய கட்சிக்கு ஆள் கிடைக்காதென்று அறிந்துகொண்டு அடுத்த ஸ்டேஷனில் சிதம்பரம் பிள்ளையும் அவருடன் பிரசாரத்துக்கு வந்த நண்பர்களும் இறங்கி வேறு வண்டிக்குப் போய் விட்டார்கள்.

ஐந்தாறு ஸ்டேஷன்கள் கடந்து ஒரு பெரிய ஸ்டேஷனில் வண்டி நின்றது. முன் சிதம்பரம் பிள்ளையுடன் எங்கள் 'கம்பார்ட்மெண்டு'க்கு வந்து என் பாட்டுகளின் பிரதியைப் பிள்ளையவர்களுக்கு வாங்கித் தந்த நண்பர் மீண்டும் வந்தார். 'சிதம்பரம் பிள்ளை உங்களுடன் பேச வேண்டுமென்று விரும்புகிறார். கொஞ்சம் வாருங்கள்' என்றார். அபிப்பிராய பேதம் எப்படியிருந்தாலும் சிதம்பரம் பிள்ளையவர்களிடத்தில் மட்டற்ற மதிப்பு வைத்திருந்த நான் அந்த அழைப்பை வெகு ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டேன். என்றாலும், கூட இருக்கிறவர்கள் என்ன நினைப்பார்களோ என்று சற்றே தயங்கி நண்பர் நாகராஜ ஐயங்காரைத் திரும்பிப் பார்த்தேன். நாகராஜ ஐயங்காரும் சிதம்பரம் பிள்ளையிடத்தில் அளவற்ற அபிமானமுள்ளவர். சிதம்பரம் பிள்ளையவர்கள் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யை ஆரம்பித்த விவரங்களையும் அதற்குத் திலகர் செய்த உதவிகளையும் அரசியல் விஷயங்களில் திலகருக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும்

இருந்த தொடர்புகளையும் ஆரம்ப காலத்தில் எங்களுக்கெல்லாம் எடுத்துச் சொன்னவர் நாகராஜ ஐயங்கார்தான். திலக மகரிஷியிடத்தில் தெய்வ பக்தியுள்ளவர் நாகராஜ ஐயங்கார். அரசாங்கம் அப்போது திலகரிடத்தில் கொண்டிருந்த பயத்தாலும் பகைமையினுலும் திலகரைப் பார்க்கப் போவதுகூட ராஜத்துவேஷக் குற்றமாகக் கொள்ளக்கூடிய சமயத்தில் சென்னைக்குத் திலகர் வருகிருர் என்பதை அறிந்தவுடனே என்னிடத்திற் கூடச் சொல்லாமல் சேலம் போவதாகச் சென்னைக்குச் சென்று, திரும்பி வந்தபின், 'திலகரை தரிசித்து விட்டேன்' என்று ஜென்ம சாபல்யம் கிடைத்துவிட்டவர் போலச் சொல்லிக் கொண்டவர் நாகராஜ ஐயங்கார்..........என்னைச் சிதம்பரம் பிள்ளை அழைப்பதாக அந்த நண்பர் சொன்னதைக் கேட்டு தயக்கத்தோடு திரும்பிப்பார்த்த என்னிடம் "ஏன் போயிட்டுவாயேன்" என்ருர் நாகராஜ ஐயங்கார். நான் எழுந்தேன். "என்ன இதைத்தான் மறுபடியும் சொல்லி உங்கள் 'ஓட்'டைக் கேட்கக் கூப்பிட்டிருப்பார். நீங்கள் வழவழ கொழகொழ என்று பேசினதால் உங்களைச் சுலபமாகத் தம் கட்சியில் சேர்த்துவிடலாம் என்று எண்ணித் தனியே பேசக் கூப்பிட்டிருக்கிருர். ஏன் இப்படி உள்ளதைச் சொல்ல பயந்து சாகிறீர்கள். கண்டிப்பாக முடியாது என்று சொல்லி விடுவதற்கென்ன?" என்று வரதராஜ முதலியார் குறுக்கிட்டார். உடனே நாகராஜ ஐயங்கார் "அவன் போயிட்டு வரட்டும், முதலியார்! நீங்கள் சும்மா இருங்கள்" என்ருர். முதலியார் சும்மா இருந்து விட்டார். நான் போனேன்.

அப்போது சிதம்பரம் பிள்ளை இருந்த 'கம்பார்ட்மெண்ட்' ஒரு இரண்டாவது வகுப்பு இடம். அவருடைய சொந்த இடம் அந்த வண்டியில்தானு என்பதும் எனக்குத் தெரியாது. அந்த ரயில் வண்டித் தொடரிலிருந்த எல்லா வண்டியிலும் எல்லா வகுப்பிலும்

எல்லா 'கம்பார்ட் மெண்டி'லும் கொஞ்சம் கொஞ்சம் சிதம்பரம் பிள்ளை பிரயாணம் செய்கிறார் என்பதை அறிந்த நான் அவர் எந்த வகுப்புக்கு டிக்கட் வாங்கி யிருந்தார் என்று அறிய முடியவும் இல்லை. அறிய விரும்பவும் இல்லை. அவர் இருந்த அதே 'கம்பார்ட் மெண்'டில் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், ஜியார்ஜ் ஜோஸப் முதலானவர்களும் இருந்தார்கள். என்னைக் கண்டவுடன் சிதம்பரம் பிள்ளை யவர்கள் மிகவும் இனிய முகத்துடன் வெகு பரிவோடு வரவேற்றுப் பக்கத்தில் இடம் தந்து இருக்கச் செய்தார். தாம் ஒரு தலைவன், படிப்பில் பட்டம் பெற்றவன், தேசத் திற்காகக் கடுமையான சிறைவாசம் செய்து அரிய பெரிய தியாகங்களைச் செய்தவன், மற்ற மனிதர் களிடத்தில் இல்லாத பல சிறப்புக்கள் தம்மிடம் உண்டு என்பதான அகந்தை எண்ணங்கள் ஒரு சிறிதும் இல்லாத சிலருள் ஒருவர் சிதம்பரம் பிள்ளை. குழந்தையைப் போலக் குழைந்து பேசி என்னுடன் குலவினார். 'ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே' என்றதன் உண் மையை அவரிடத்தில் அப்போது கண்டேன்.

நெடுநாள் பழகினவர்போல சிதம்பரம் பிள்ளை என்னுடன் பேசுவதைக் கண்ட ஆச்சாரியார் அதிசயம் அடைந்தவர்போல, "ராமலிங்கம் பிள்ளையை உங்க ளுக்குத் தெரியுமா?" என்று சிதம்பரம் பிள்ளையைக் கேட்டார். உடனே பிள்ளையவர்கள், "நன்றாகத் தெரியும். இதோ பாருங்கள்" என்று தம் கையில் இன்னும் விரித்தபடியே வைத்துக்கொண்டிருந்த நான் பாடிய திலகர் சரம கவிகளின் அச்சுத் தாளை ஆச்சாரி யாரிடம் நீட்டினார். அதை வாங்கிப் பார்த்துவிட்டு ஆச்சாரியார், "ஓ! இதுவா? இது உங்களுக்கு மிகவும் பிடிக்கும்" என்றார். அந்தப் பாடலின் பிரதியை நானே முன் ஆச்சாரியாருக்கு அனுப்பியிருந்தேன். அவரும் அவற்றை மிகவும் பாராட்டிக் கடிதம் எழுதியிருந்தார்.

நான் ஏதாவது புது பாட்டுக்களைச் செய்தால் அவற்றை அப்போதைக்கப்போது ஆச்சாரியாருக்கு அனுப்புவ துண்டு. அவர் அதற்குப் பாராட்டுக்களை எழுதுவார். அப்படி நானாக அவருக்கு அனுப்பத் தவறினாலும் என்னுடைய பாட்டு என்று பத்திரிகைகளில் வெளி யான எதையும் விரும்பிப் படித்துத் தாமே எனக்கு விமர்சனம் எழுதுவார். இது எங்களுக்குள் இருந்து வந்த தொடர்பு.

சிதம்பரம் பிள்ளை குலுங்கச் சிரித்துக் குதூகலம் மிஞ்சத் தம்முடைய இயல்பான கலகலத்தப் பேச்சில் கணீர்கணீரென்று சொற்களைக் கொட்டி என் கவி களைப் புகழ்ந்தார். ஆச்சாரியார் பக்கம் திரும்பி, "நானும் திலகரைப் பற்றி இரங்கற் பாட்டுக்களைப் பாடினேன். இப்படி அமையவில்லை. உண்மையான கவித்திறம் எல்லோருக்கும் வருவதல்ல" என்று சொன்னபோது என் உடல் மயிர்க் கூச்செறிந்து உள்ளம் பூரித்துக் கூச்சம் உதித்துக் குனிந்து கொண் டேன். என்னிடத்தில் உண்மைக் கவித்திறம் இருப்ப தாக நான் எண்ணி எதையும் செய்ததில்லை. அப்படி எண்ணி இறுமாப்படைந்துவிடக் கூடாதென்பது எனக்குக் கிடைத்த சத்சகவாசங்களினால் என் மனதில் எப்போதும் இருந்து வந்திருக்கிற ஒரு பிரார்த்தனை. என்றாலும் சிதம்பரம் பிள்ளையைப் போன்ற ஒரு சிறந்த தேசபக்தர், தியாகமூர்த்தி திலகர் பிரானுடைய பிரதம சிஷ்யர்களுள் சிறப்புற்ற ஒருவர், அன்னை பாரத தேவியின் விடுதலைக்காக மிகவும் கொடுமைகள் நிறைந்த சிறைவாசம் செய்து அருந்தவமாற்றிய அண்ணல், ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சியுள்ள அறிஞர் அப்படி என்னைப் புகழ்ந்து தம் கவிகளைக் காட்டிலும் என் கவிகளில் உண்மைக் கவித்திறமிருப்பதாகச் சொன்னபோது நான் ஆனந்த பரவசம் அடைந்து விட்டது அதிசயம் அல்ல.

அப்போது என் வயது முப்பத்துமூன்று. பிள்ளை யவர்களுடைய வயது நாற்பத்தெட்டு. வயதிலும்

கல்வியறிவிலும், அனுபவத்திலும், தேசபக்தியிலும் தியாகத்திலும் என்னைக்காட்டிலும் எவ்வளவோ பெரியவரான அவர் தம்முடைய கவியைக் காட்டிலும் என்னுடைய கவி உண்மைக் கவித்திறம் உள்ளது என்று சொன்னது அவருடைய சான்ருண்மைக்கு அறிகுறி என்று இன்றளவும் நான் எண்ணியெண்ணி இன்புற்று வருகிறேன். 'சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி துணையல்லார் கண்ணும் கொளல்' என்ற தெய்வத் திருவாக்கின் உண்மையை அப்போது அவரிடம் கண்டேன். அதுவரையிலும் வெறும் தேசபக்திக்காகவும் தியாகத்துக்காகவும் மட்டும் அவரிடத்தில் எனக்கு இருந்துவந்த நன்மதிப்பு அந்த நிமிஷம் முதல் அதிகப்படலாயிற்று. என்னைப் புகழ்ந்து விட்டார் என்பதற்காக அல்ல. தம்மைக் குறைத்துக் கொண்டார் என்பதற்காகவே. என் கவியைமட்டும் புகழ்ந்து பேசி அத்துடன் விட்டிருக்கலாம். அது சாதாரணமாக மற்றவர்கள் செய்திருப்பார்கள்; ஆனல் சிதம்பரனர் தம்முடைய கள்ளமற்ற உள்ளத்தின் பெருமையினல் தம்மைக் குறைத்தும் என்னைப் புகழ்ந்தும் பேசினர். தன்னலமற்ற பெரியவர்களின் தன்மைக்கு அது ஒரு சாட்சி.

பிறகு வெகுநேரம் அவரும் ஆச்சாரியாரும் கவித்துவத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆச்சாரியார் அப்போது என்னைப்பற்றியும் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரைப் பற்றியும் பிள்ளையவர்களுடன் பேசினர் என்பதை என் காதில் விழுந்த இரண்டொரு வார்த்தைகளால் அனுமானித்தேன். அவர்கள் பேசிக்கொண்டதின் பெரும்பகுதியும் என் காதுக்கு எட்டவில்லை. கடைசியாக உரத்த குரலில் சிதம்பரம் பிள்ளையவர்கள், 'அந்த மன்னன் பாரதியை நினைத்தால்' என்று சொன்னது மட்டும் என் நினைவில் இன்றும் நிற்கிறது. அதன் தொடர்ச்சியாகக் குறைந்த குரலில் அவர் என்ன சொன்னரோ அவை என்

செவிட்டுக் காதுக்குச் சிக்கவில்லை. ஆனால் ஆச்சாரியாருடன் பேசும்போது சிதம்பரம் பிள்ளையவர்கள் அடிக்கடி என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்ததனால் அவர்களுடைய பேச்சு என்னையும் பற்றியதாகத்தான் இருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டேன்.

இந்தப் பேச்சு முடிந்தும் முடியாமலும் இருக்கும் போது, டாக்டர் ராஜன் முதலானவர்கள் உட்கார்ந்திருந்த எதிர் வரிசையிலிருந்து அவர்களுக்குள் ஒருவர் தம் கையில் வைத்திருந்த ஏதோ அரசியல் சம்பந்தமான ஒரு காகிதத்தைப் பார்க்க ஆச்சாரியாரை அழைத்ததனால் ஆச்சாரியாரும் மற்றவர்களும் அதிலே கவனம் செலுத்தலானார்கள்.

சிதம்பரம் பிள்ளை என் பக்கம் திரும்பி உட்கார்ந்தார். "உங்கள் பாட்டு மிகவும் நன்றாக இருக்கிறது. உணர்ச்சி வேகம் பொங்கி வருகின்றது. அதைப் படித்துப் பரவசமடைந்தேன். அதைச் சொல்லத்தான் உங்களை அழைத்தேன்" என்றார். உண்மையும் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று அறிந்தேன்.

ஆனாலும் தனியே பேசச் சந்தர்ப்பம் கிடைத்ததை நழுவ விடக்கூடாது என்று நினைத்தோ என்னவோ சற்றே தயக்கத்துடன் தம்முடைய காந்தி தீர்மான எதிர்ப்புப் பிரசாரத்தை ஆரம்பித்து, சில நிமிஷங்கள் அந்தத் தீர்மானத்தினால் வரக்கூடிய தீமைகளைத் தெளிவாகச் சொல்லிவிட்டு, திலகர் அந்தச் சமயத்தில் இல்லாமற் போனதையும் நினைப்பூட்டி என் அபிப்பிராயத்தை அறிய விரும்பினார். நான் அவர் சொன்னதையெல்லாம் வெகு அனுதாபத்தோடு தலையை அசைத்துக் கேட்டுக்கொண்டு பதிலே பேசாமல் இருந்தேன். அவருடைய வாதத்திலுள்ள குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டி எதிர்வாதம் செய்ய எத்தனையோ விஷயங்கள் என் மனதில் எழுந்தன.

ஆனாலும் அவருடன் எதிர்த்துப் பேசி வாதாட மட்டும் தைரியம் வரவில்லை. அவருடைய வாதங்கள் மிகவும் திறமை வாய்ந்தவை. எதிரியை எளிதில் மடக்கிவிடக் கூடிய ஆற்றல் அவரிடம் அதிகம் இருந்ததை அறிந்தேன். அவர் சொன்ன சில ஆணித்தரமான காரணங்கள் மறுக்க முடியாதனவென்றே அப்போது என் மனதில் பட்டது. திலகர் உயிருடன் இருந்தால் இந்தத் திட்டத்திற்கு உடன்படுவாரா என்பது எனக்கும் ஒரு சந்தேகமாகத்தான் இருந்தது. திலகரின் மீது எனக்கிருந்த பக்தி எள்ளளவும் இப்போது குறைந்து விடவில்லை. இருந்தாலும் வெறும் கண் மூடித்தன மாகத்தானே என் உள்ளத்தை முற்றிலும் காந்தியிடம் பறிகொடுத்து விட்டவனாக இருந்தேன். காந்தியவர் களிடத்தில் எனக்கிருந்த அபார நம்பிக்கையால் காந்தீயத்தால் இந்த நாட்டிற்கு மிகவும் தீமை விளையும் என்பதை விடாப்பிடியாகப் பேசி, ஓய்வு ஒழிச்சலில்லா மல் பிரசாரம் செய்து வந்த சிதம்பரம் பிள்ளையிடம் என்னுடைய காந்தி பக்தியைச் சொல்லிக்கொண்டு அவருடைய அதிருப்திக்கு ஆளாக என் மனம் துணிய வில்லை. காந்தியடிகளிடத்தில் எனக்கு ஏற்பட்டு விட்ட அளவற்ற நம்பிக்கையும், திலகரிடத்தில் எனக் கிருந்த தெய்வீக பக்தியும், சிதம்பரம் பிள்ளை யவர் களிடத்தில் எனக்கிருந்த நன்மதிப்பும், அத்துடன் அவர்தம் கவிகளைக் குறைத்து என் கவிகளைப் புகழ்ந்து விட்ட புதுப் பூரிப்பும் எல்லாம் சேர்ந்து ஒன்றோ டொன்று பின்னிப் பிணங்கி அருட்டி மருட்டி என்னைக் குழப்பி விட்டன. சிதம்பரம் பிள்ளையோ அடுத்தடுத்து என் அபிப்பிராயம் என்னவென்று கேட்டுக்கொண்டே இருந்தார். தட்டிப் பேசவோ தைர்யம் இல்லை; ஒத்துப் போகவோ உள்ளம் உடன்படவில்லை. திண்டாடித் திணறிப் போனேன்.

கடைசியாக அவரிடமிருந்து தப்பித்துக் கொள்ள ஒரு சூழ்ச்சி செய்தேன். அது சூழ்ச்சிதான். ஆனால்

அதில் பொய்யோ பித்தலாட்டமோ இல்லை. அதில் என் உள்ளக் கருத்தை உள்ளபடி சொல்லிவிடத் துணிவில்லாமற்போன குற்றம் இருந்தாலும் அதில் மனச்சாட்சி வருந்தக் கூடிய பாபம் ஒன்றுமில்லை யென்று கண்டு அதை உபயோகப்படுத்திக் கொண்டேன்.

அவருடைய விவாதங்களைக் கேட்டுக்கொண்டே அவருக்கு என்ன விடையளிப்பது, எப்படி விடுபடுவது என்பதைப்பற்றி எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்த என்னைப் பார்த்து,

"என்னுடைய ஆர்கியுமெண்ட்களுக்கு உங்கள் உடன்பாடில்லையா?" என்றார்.

அதற்கும் நான் பேசாமலிருந்தேன். என்னைச் சும்மா விட்டுவிடும்படி அவருடைய இரக்கத்தை வேண்டுகின்றவன்போல் அவரைப் பார்த்தேன். அந்த விண்ணப்பப் பார்வை வெற்றி பெற்றதைப் போல் அவர்,

"நான் சொல்லுவது உங்களுக்கு விருப்பமில்லை யானால் கூசாமல் சொல்லுங்கள். உங்களைக் கசக்க வேண்டுமென்று நான் கருதவில்லை" என்றார்.

"தாங்கள் செல்லுவதெல்லாம் சரியா அல்லவா என்று நான் தீர்ப்புச் சொல்லுவது சரியல்ல. ஆனால் நான் காந்தியாருடைய தீர்மானத்தை ஆதரிப்பதாக வாக்களித்து விட்டேன்" என்றேன்.

"வாக்களித்து விட்டீரா! யாருக்கு? இப்படிப்பட்ட விஷயங்களில் எந்த நிமிஷத்திலும் நம்முடைய அபிப்பிராயங்கள் மாறலாம். அப்படி மாற்றிக்கொண்டு சமயத்திற்கேற்றபடி ஓட் செய்யும் தீர்ப்பு நம் உரிமை யல்லவா?" என்பனபோன்ற பல விஷயங்களைச் சொல்லி என் வாக்குறுதிகளை நான் மீறிவிடுவது

அரசியல் விஷயங்களில் அதர்மம் ஆகாது என்று ஆலோசனை சொல்வதுபோல் பேசினார்.

"நானும் ஸ்ரீ நாகராஜய்யங்காரும் இன்னும் இரண்டு முஸ்லிம் சகோதரர்களும் தமக்குப் பிரதி நிதிகளாக அங்குள்ள 'கிலாபத்' கமிட்டி சார்பாக தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிறோம். காந்தியின் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றே எங்களை முற்றிலும் நம்பி அவர்கள் அனுப்பியிருக் கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு விரோதமாக எதையும் செய்வது துரோகம் ஆகுமே என்றுதான் அஞ்சுகிறேன்" என்றேன்.

இதைச் சொன்ன உடனே சிதம்பரம் பிள்ளை கலகலவென்று சிரித்து என் கையைப் பிடித்துக் குலுக்கி,

"சபாஷ் புலவரே, உங்கள் உண்மைத் தன் மையை நான் மிகவும் மெச்சுகின்றேன். மனமார வாழ்த்துகிறேன். நீங்கள் உங்களை அனுப்பினவர் களுடைய நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக்கூடா தென்று நினைப்பது மிகவும் உயர்வான நோக்கம். அப்படியே செய்யுங்கள். அதுதான் சரி. நான் உங்களைத் தொந்தரவு செய்யக்கூடாது" என்று அந்தப் பேச்சை முடித்துவிட்டார். நான் என் சங்கடங் களிலிருந்து விடுதலை யடைந்து சந்தோஷம் அடைந் தேன்.

இந்த நிகழ்ச்சி ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையாகிய இந்தக் கப்பலோட்டிய தமிழனுடைய நேர்மைக் குணத்தின் சிறப்பை என் நினைவில் பதிய வைத்தது. (மேலே சொன்ன சம்பாஷணையில் அடங்கியுள்ள கருத்துகள் அத்தனையும் உண்மை. ஆனால் முப்பத்தி நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த இந்தப் பேச்சுகளில் நாங்கள் பிரயோகித்த பதங்கள் இவைதானா என்று சொல்ல முடியாது.)

அடுத்த ஸ்டேஷனில் நான் சிதம்பரம் பிள்ளை இருந்த வண்டியை விட்டிறங்கி எங்கள் இருப்பிடத்துக்கு வந்தேன். நடந்ததையெல்லாம் நாகராஜ ஐயங்காரிடம் சொல்லி சிதம்பரம் பிள்ளை திலகர் உயிருடன் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடம் கொடுக்கமாட்டார் என்று விவாதித்த விவரங்களையும் சொன்னேன். அதற்கு நாகராஜ ஐயங்கார் சிதம்பரம் பிள்ளை சொன்ன விஷயங்களுக்கெல்லாம் மறுப்புச் சொல்லி திலகர் இருந்தால் கட்டாயம் காந்தியை ஆதரிப்பாரேயல்லாமல் எதிர்க்க மாட்டார் என்று கண்டிப்பாகச் சொன்னார். திலகரைப் பற்றி எனக்கிருந்த சந்தேகமும் தெளிந்துவிட்டது போல நிம்மதியடைந்தேன்.

கப்பலோட்டிய தமிழனைச் சந்தித்துப் பேசின சம்பவத்தால் அவருடைய கல்வித்திறமையும், வாதிப்பதில் அவருக்கிருந்த வல்லமையையும், சமத்துவ எண்ணத்தையும், சரச சல்லாப குணத்தையும், நேர்மையைப் பாராட்டும் நெறியையும் நான் நேராக அறிந்து கொள்ள நேரிட்டது.

அதே ரயில் வண்டிப் பிரயாணத்தில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய திடசித்தத்தையும் போர்க் குணத்தையும் தெரிந்துகொள்ளவும் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது.

நாங்கள் பிரயாணம் செய்த 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டி சென்னை சென்டிரல் ஸ்டேஷனிலிருந்து, வழக்கமாகத் தினந்தினம் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகிற 'கல்கத்தா மெயில்' வண்டி புறப்படுவதற்கு ஆறு மணி நேரத்துக்கு முன்னால் புறப்பட்ட வண்டி. மெயில் வண்டியைப் போல் அல்லாமல் அநேக சிறிய ஸ்டேஷன்களிலும் நின்று அங்கங்கே காத்திருந்த 'கிலாபத்' பிரதிநிதிகளையும் ஏற்றிக் கொண்டு போக வேண்டியிருந்ததால் மெயில்

வண்டியைவிட அதிக நேரம் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. இரண்டு இரவும் கிட்டத்தட்ட இரண்டு பகலும் ஓடி மூன்ருவது நாள் காலை பத்து மணிக்கு கல்கத்தா சேரும்படியாக 'ஷெடியூல்' செய்யப்பட்டது.

கல்கத்தாவுக்கு முன்னுல் கரக்பூர் என்ற பெரிய ஸ்டேஷனில் எங்கள் 'ஸ்பெஷல்' நின்றது. நின்றது நின்றதுதான். சுமார் மூன்று மணி நேரத்துக்குமேல் அங்கே நிற்கப் போட்டு விட்டார்கள். ஏன் இவ் வளவு நேரம் இங்கே நிறுத்தி விட்டார்கள் என்ற பரபரப்பு எங்களுக்குள் உண்டாயிற்று. சில தீவிர வாதிகள் ஏன் இப்படிக் காக்கப் போட்டுவிட்டார்கள் என்று 'கார்டு' துரையைக் கேட்டார்கள்; அவர் 'ஸ்டேஷன் மாஸ்டரை'க் கேட்கச் சொன்னுர். ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டார்கள். அவர் கல்கத்தா மெயில் வண்டி பின்னுல் வந்துகொண்டிருப்பதாகவும் அந்த மெயில் இந்த ஸ்டேஷனுக்கு வந்து எங்கள் ஸ்பெஷலுக்கு முன்னுல் புறப்படும் என்றும் அது புறப் பட்டுப் போனபின் அரைமணி நேரத்துக்கு அப்புறம் தான் எங்கள் வண்டி புறப்படும் என்று சொன்னுர். இதைக் கேட்ட தீவிர தேசபக்தர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன! அந்த மெயில் வண்டிக்கு ஆறுமணி நேரத்துக்கு முன்னுல் புறப்பட்ட எங்களை அனுவசியமாக இங்கே மூன்று மணிக்குமேல் காக்கப் போட்டு, எங்கள் வண்டிக்கு முன்னுல் மெயிலைப்போக விடுவதென்ருல் இதைவிட எங்களுக்கு அவமதிப்பு இன்னும் என்ன இருக்கிறது?" என்று அந்த ஸ்டேஷன் மாஸ்டரோடு ரகளை செய்ய ஆரம்பித்தார் கள். இந்தக் கூச்சல் 'கப்பலோட்டிய தமிழன்' காதில் விழுந்தது. அவர் வண்டியை விட்டு இறங்கி வெகு வேகமாக ஓடி விசாரித்தார். விஷயத்தை அறிந்த உடன் ஸ்டேஷன் மாஸ்டரோடு சண்டை போட்ட கட்சிக்குத் தாமே தலைவராகிவிட்டார். மற்றவர்களை

யெல்லாம் கையமர்த்திவிட்டு சிதம்பரம் பிள்ளையே அந்த வழக்கை வாதித்து, "எங்கள் வண்டிக்கு முன்னால் மெயில் வண்டியைப் போகவிட மாட்டோம். எங்கள் வண்டிக்கு அரை மணி நேரத்துக்குப் பின்னால் தான் மெயிலை விடவேண்டும். எங்கே! அந்த மெயில் வண்டி எங்களுக்கு முன்னால் எப்படிப் போய்விடும் என்பதைப் பார்த்து விடுகிறோம்" என்று சவால் விடுத்தார்.

அதற்கு அந்த ஸ்டேஷன்மாஸ்டர், "அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் என்ன செய்வேன்? எனக்குக் கிடைத்துள்ள உத்தரவுப்படிக்குத்தான் நான் என் கடமையைச் செய்யவேண்டும். மெயில் வண்டி முன்னால் போக வேண்டுமென்று உத்தரவு செய்தது நானல்ல" என்றார். அதற்குச் சிதம்பரம் பிள்ளை, "மெயில் வண்டி முன்னாலோ போகட்டும், பின்னாலோ போகட்டும். அதைப்பற்றி, அக்கரை யில்லை. எங்களை எதற்காக இங்கே அனாவசியமாக மூன்றுமணி நேரத்துக்குமேல் காக்கப் போட்டீர்கள்? இந்த மூன்று மணி நேரமும் வண்டி ஓடியிருந்தால் இன்னேரம் நாங்கள் கல்கத்தா போய்ச் சேர்ந்திருப் போம் அல்லவா?" என்றார்.

அதற்கு ஸ்டேஷன் மாஸ்டர், "ஆம். இது சரியான கேள்விதான். ஆனால் உங்கள் வண்டியை இங்கே மூன்று மணி நேரம் காக்கப் போடவேண்டுமென்பது ஏற்பாடல்ல; எதிர் பாராமல் ஏற்பட்டு விட்டது. இந்த ஸ்டேஷனில்தான் மெயில் வண்டி உங்கள் வண்டியைத் தாண்டி முன்னால் போக வேண்டும் என்பது டிராபிக் 'மானேஜ' ருடைய உத்தரவு. மெயில் வண்டி இன்றைக்கு சுமார் மூன்று மணி நேரம் 'லேட்'. அதனால் இந்தச் சங்கடம் ஏற்பட்டுவிட்டது. என்ன செய்யலாம்" என்றார்.

"என்ன செய்யலாம்? எங்கள் வண்டியை உடனே விடலாம். மூன்று மணி நேரம் 'லேட்' ஆன மெயில் வண்டி இன்னும் கொஞ்சம் லேட் ஆகி விட்டால் என்ன முழுகிப் போகும்? எங்கள் வண்டியை விடச்சொல்லுங்கள்" என்று கப்பலோட்டிய தமிழன் கர்ஜித்தார்.

"அப்படிச் செய்ய எனக்கு அதிகாரமில்லை" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"அப்படிச் செய்ய உங்களுக்கு அதிகாரம் இல்லை யென்றால் எப்படிச் செய்வது? சரியென்று எங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறோம்" என்று சொல்லிக் கொண்டே சிதம்பரனார் வண்டியை நோக்கி வந்தார். இதற்குள் வண்டியில் இருந்த எல்லா இளைஞர்களும் இறங்கி வந்து சிதம்பரம் பிள்ளையைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களைப் பார்த்து சிதம்பரம் பிள்ளை ஒரு சிறு பிரசங்கம் செய்து, "சரி; அந்த மெயில் வண்டி நம்முடைய வண்டிக்கு முன்னால் போகக்கூடாதென்று நாமெல்லோரும் மெயிலுக்கு முன்னால் தண்டவாளத்தில் உட்கார்ந்து கொண்டு சண்டித்தனம் செய்வோம். மெயில் எப்படி முன்னால் போய்விடும் பார்ப்போம்" என்றார். (அப்போது சண்டித்தனம் என்ற பதம்தான். 'சத்யாக்ரகம்' என்ற சொல் அப்போது வழக்கத்துக்கு வரவில்லை) உடனே சிதம்பரம் பிள்ளையினுடைய கட்சிக்கு ஏராளமான ஆட்கள் சேர்ந்தார்கள். எனக்குத் தெரிந்த யாரார் அதில் சேர்ந்தார்கள், யாரார் சேரவில்லை என்பது இப்போது என் நினைவில் இல்லை. ஆனால் ராஜகோபாலாச்சாரியாரும் அவருடன் சேர்ந்த ஒரு சிறு கோஷ்டியும் அப்படிச் செய்வது சரியல்ல வென்று சிதம்பரம் பிள்ளைக்கு மாறுபட்டார்கள் என்பதை நான் இன்னும் மறக்கவில்லை. எனது நண்பர் நாகராஜ ஐயங்கார் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்த அத்தனை பரபரப்பிலும் இருந்த

இடத்தைவிட்டு அசையவில்லை. ஸ்டேஷன் மாஸ்டருக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் நடந்த வாக்குவாதத்துக்கு முன்னாலிருந்தே இந்த விவகாரம் ஆரம்பமானதிலிருந்து அதன் முன்னேற்றத்தையும் முடிவையும் அறிந்து கொள்ள வெகு ஆசைப்பட்ட நான் அடிக்கடி வண்டியை விட்டு இறங்குவதும் மீண்டும் வந்து அதில் ஏறி வண்டியைவிட்டு இறங்காமலிருந்த நாகராஜய்யங்காருக்கு நடக்கிற விவாதங்களின் விவரங்களைச் சொல்லுவதுமாக இருந்தேன். சிதம்பரம்பிள்ளை வண்டிக்கு முன்னால் சண்டித்தனம் செய்ய ஆள் திரட்ட ஆரம்பித்ததை அறிந்த உடன் நாகராஜய்யங்கார், வண்டியை விட்டிறங்காமல் வண்டிக் கதவண்டை வந்து நின்று கொண்டு பிளாட்பாரத்தில் சண்டித்தனம் செய்யப் போகிறவர்கள் கும்பலில் நின்று கொண்டிருந்த என்னைக் கைகாட்டி அழைத்தார். நான் போனேன். இரண்டு பேரும் உள்ளே போய் எங்கள் இருப்பிடத்தில் உட்கார்ந்தோம். நாகராஜன் என்னைப் பார்த்து, "ராமலிங்கம் நீ இந்த ரகளையில் சேராதே. மெயில் வண்டிக்கு 'மெயில்' என்ற முறையில் நியாயமாகக் காட்ட வேண்டிய மரியாதைக்காக அதை முன்னால் போக விடுவதில் அநியாயம் ஒன்றுமில்லை. இப்போதிருக்கிற வேகத்தில் அந்த நியாயத்தை நாம் சொன்னால் கேட்கமாட்டார்கள். யாரோ எப்படியோ செய்யட்டும். நீ மட்டும் அதில் சேராதே" என்று கண்டித்தார்.

நான் பிளாட்பாரத்தில் சிதம்பரம் பிள்ளையின் கட்சியை ஆதரிக்கும் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தது அவருடைய கட்சியை ஆதரித்து விட்டதனால் அல்ல. ஆனால் அதில் சேரலாமா வேண்டாமா என்று என்னுள் குழம்பிக்கொண்டுதான் கும்பலோடு நின்று கொண்டிருந்தேன். சிதம்பரம்பிள்ளை ஸ்ரீ திலகருடைய மதிப்பிற்குரிய தேசபக்தர் என்பதனால் எனக்குப் பிள்ளையவர்களிடத்தில் இருந்த பிரியத்துக்கு மட்டுமாவது

அவர் கட்சியில் சேரத்தான் ஆசை உதித்தது. ஆனால் காந்தியடிகளின் தெய்வீகத்தன்மையில், என்னை யறியாமலும் என் மனத்தில் உதித்து உரம் பெற்று விட்ட காந்தி பக்தியும், அந்தக் காந்திக்கு விரோத மாகச் சிதம்பரம் பிள்ளையவர்கள் பிரசாரம் செய்து வருகிறாரே என்ற வருத்தமும் அந்த ஆசையைத் தடுத்தன. உண்மையைச் சொன்னால் அப்போது என்னுடைய வாலிபத் துடிப்புகள் என்னைச் சிதம்பரம் பிள்ளையோடு சேரத்தான் வற்புறுத்தின. அப்படிக் குழம்பிக் கொண்டே கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த என்னைக் கூப்பிட்டு நாகராஜய்யங்கார், 'நீ மட்டும் அதில் சேராதே' என்று சொன்னபோது ஒரு எதிர்ப்பு உணர்ச்சிதான் எழுந்தது. நாகராஜய்யங்காரோடு கொஞ்சம் தர்க்கம் செய்தேன். எவ்வளவு தர்க்கம் பேசியும் அவர் இடம் கொடுக்கவில்லை. நாகராஜ ஐயங்கார் பிள்ளைப் பருவம் முதல் பிரியாத சகபாடி. நானும் அவரும் சரசமான சல்லாபிகள். வாடா போடா என்றுதான் எங்களுக்குள் வழக்கம். எல்லா விஷயங் களிலும் அவருடன் எதிர்ப்புப் பேசுவதில்தான் எனக்கு இச்சை. இருந்தாலும் அவரது மாசற்ற வாழ்க்கையும் மருவற்ற ஒழுக்கமும், பகைமை பாராட்டுகிறவர் களுக்கும் நன்மையே செய்கிற அபூர்வ பண்பும், அவமரியாதையாகப் பேசி, புண்படுத்தி விடுகிறவர் களிடத்திலும் அவர் காட்டும் பொறுமையும் எனக்கு அவரிடத்தில் ஒருவித பயபக்தியை உண்டாக்கி யிருந்தது. அதனால் ஆரம்பத்தில் நான் எவ்வளவு ஆவேசத்தோடு எதிர்த்து வாதாடினாலும் கடைசியில் அவருக்கு அடங்கிப் போவதே வழக்கம். காந்தீய சாத்வீகத்தில் எனக்கு வந்த கவர்ச்சியும் அதனால் என்னுள் உதித்த கவிதைகள், களங்கமற்ற சாந்த வாசனை கமழ்ந்துகொண்டே வளர்ந்து வரக்காரணமும் இயல்பாகவே சாந்த குணம் நிறைந்திருந்த நாகராஜய் யங்காருடைய சகவாசத்தினால் என்றால் அது வெறும் சத்தியம்தான், சம்பிரதாயத்துக்காகப் புகழ்வதல்ல.

ஆதலால் என்னுடைய ஆசையையும் அபிப்பிரா யத்தையும் ஒதுக்கிவிட்டு நாகராஜன் சொன்னதை ஒத்துக்கொண்டேன்.

வேடிக்கையைப் பாருங்கள். திலகர் பிரானையும் அவருடைய பிரதம சிஷ்யர் என்பதற்காக சிதம்பரம் பிள்ளையவர்களையும் எந்நேரமும் புகழ்ந்து போற்று வதனால், வெகு சுலபமாகச் சிதம்பரம் பிள்ளையின் கட்சியில சேர்ந்துவிட வேண்டிய நானும் நாகராஜய் யங்காரும் இன்னும் சிலருமே அதில் சேராதிருக்க, காந்தியடிகளை மிகவும் ஆதரித்து, காந்தியின் 'சாத்வீக ஒத்துழையாமை'த் தீர்மானம் நிறைவேறக்கூடா தென்று நெடுக பிரசாரம் செய்துவந்த சிதம்பரம் பிள்ளையை நேர்ந்தபடியெல்லாம் எதிர்த்துப் பேசி சண்டை யடித்துக்கொண்டே வந்தவர்களில் முதல் வராக இருந்த எங்களுடன் வந்த வரத ராஜ முதலி யாரும் அவருடன் சேர்ந்து பேசின மற்றவர்களும் மெயில் வண்டிக்கு முன்னால் தண்டவாளத்தில் படுத்துக்கொள்ளுகிற கட்சியில் தாராளமாகச் சேர்ந்து கொண்டார்கள். சாத்வீக இயக்கத்தை ஆரம்பிக்கப் போகின்ற காந்தியடிகளுக்குச் சாதகமாக 'ஓட்' போடு வதற்கென்றே சத்தியம் செய்துகொண்டு வந்திருப் பதாக சிதம்பரம் பிள்ளையுடன் வாது பேசினவர்களுள் பெரும்பாலோரும் எங்கள் ரயில் வண்டி, மெயில் வண்டிக்கு முன்னால் போகவேண்டும் என்பதற்காக அப்போது எழுப்பின கோஷங்களையும் கோபதாபப் பேச்சுக்களையும் இப்போது நினைத்தாலும் துணுக்க முண்டாகிறது. சாத்வீகத்தையும் சத்தியத்தையும் எழுத்தாலும் சொல்லாலும் எவ்வளவு போற்று கின்றோம். ஆனால் செயலில் மட்டும் எவ்வளவு மாற்று கின்றோம் என்பது, காந்தியத்தில் முப்பத்தி நான்கு வருஷங்கள் ஊறிக் கிடந்தபிறகும் இன்றைக்கு இருக்கிற உண்மையைப் பார்க்கிறபோது, உலகப் போக்குக்கு ஒத்துக்கொள்ளாத இயக்கம் என்று அதை

பலபேர் எதிர்த்த அந்த ஆரம்ப காலத்தில் அப்படி இருந்ததில் ஆச்சர்யமில்லை. சிதம்பரம் பிள்ளையின் படையில் பலர் சேர்ந்தார்கள். அந்தச் சேனைக்குத் தலைவனாக சிதம்பரம் பிள்ளையவர்கள் விளங்கிய வீரா வேசத் தோற்றம் அடிக்கடி என் மனக்கண்ணின் முன்னால் மலர்வதுண்டு.

வெள்ளைக்காரனுடைய அதிகாரக் கோட்டையை இடித்தெறியப் படையெடுத்துவிட்ட சேனைக்குத் தலைவன் போல கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம் பிள்ளை வெகு களிப்புடன் அன்றைக்கு நின்ற அந்தக் காட்சி,

> மானிலம் அதனில் உண்டுபோர் எனில் அந்த மாற்றம்
> தேனினும் இனிப்புச் செய்யும் சிந்தையர்..............

என்று கம்பன் போர்வீரர்களின் மறத்தன்மையை வர்ணிக்கும்போது சொல்லுகிற வரிகளை இன்றைக்கும் நினைப்பூட்டுகின்றது.

சேனை திரண்டுவிட்டது. மெயில் வண்டியை ஸ்டேஷனுக்குள் அனுமதிப்பதற்குக் கைகாட்டி இறக் கப்பட்டுவிட்டது. மெயில் வேகத்தில் வந்துகொண்டிருக் கிறது. சிதம்பரம் பிள்ளையும் அவருடைய சேனை வீரர் களும் மெயில் வண்டி நிற்பதற்கு முன்னாலும் அதன் இஞ்சினுக்கு முன் தண்டவாளத்தில் குதித்துவிடுவார் களோ என்று நினைக்கும்படி துடித்துக்கொண்டிருந் தார்கள்........இதற்குள் அந்த படையெடுப்பை விரும் பாதவர்களான சிறுபான்மைத் தொகுதியில் இருந்த வர்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அவர்களிற் சிலர் சிதம்பரம் பிள்ளையிடம் சென்று அந்த முரட்டு முயற்சியை விட்டுவிடும்படி பேசிப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. கடைசியாக எங்களுடன் அதே வண்டியில் வந்துகொண்டிருந்த சேலம் சக்கரவர்த்தி விஜயராகவாச்சாரியாரிடம் சென்றார்கள். விஜயராக வாச்சாரியார் திலகர் கூட்டத்தைச் சேர்ந்தவர். காந்தி

யின் தீர்மானத்தை மிகக் கடுமையாகக் கண்டிப்பவர்களில் முதன்மையானவர். ஆதியிலிருந்து காங்கிரஸ் மகாசபையின் செல்வாக்குக்குச் சிறந்த துணைவரான பழுத்த தேசபக்தர். சண்டை கிடைத்தால் சாமான்யத்தில் விட்டுவிடக் கூடியவரல்ல. வக்கீல் தொழிலிலும் சரி, காங்கிரஸ் மேடையிலும் சரி, எதிர்க் கட்சியைக் கதிகலங்கச் செய்துவிடக்கூடிய திறமை வாய்ந்தவர். சிதம்பரம் பிள்ளையினிடத்தில் மிகவும் அபிமானமுள்ளவர். பிள்ளையவர்கள் தம்முடைய கப்பலோட்டும் முயற்சியில் அந்த 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'க்கு மூலதனம் தேடிப் பங்குதாரர்களைச் சேர்க்கச் சேலம் வந்திருந்தபோது ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும்தான் அந்த முயற்சிக்கு முன்னால் நின்று உதவி புரிந்தவர்கள். இந்த இரண்டு ஆச்சாரியார்களுக்குள் ராஜகோபால ஆச்சாரியார் காந்தியின் கட்சியைச் சேர்ந்தவராகிவிட்டதால் அவருடைய வார்த்தை சிதம்பரம் பிள்ளையிடத்தில் செல்லாது. விஜயராகவாச்சாரியார் காந்தி கட்சிக்கு விரோதமானதினாலும் சிதம்பரம் பிள்ளைக்கு விஜயராகவாச்சாரியாரிடத்தில் மிகுந்த பக்தி விசுவாசம் இருந்ததினாலும் அவர் சொன்னால்தான் சிதம்பரம் பிள்ளை கேட்பார் என்று விஜயராகவாச்சாரியாரிடம் போய் சிதம்பரம் பிள்ளை செய்யத் தீர்மானித்திருக்கிற காரியத்தை விட்டுவிடும்படி அவருக்குச் சொல்லச் சொல்லி விஜயராகவாச்சாரியாரை வேண்டினார்கள். பணத்தை மட்டும் கருதிய கச்சேரி வழக்குகளில் கூட தம்முடைய கட்சிக்காரனை விட்டுக் கொடுக்காத விஜயராகவாச்சாரியார் தேசாபிமானத்திலும் காங்கிரஸ் கொள்கையிலும் தம் கட்சியைச் சேர்ந்தவராகத் தமக்கு மிகவும் வேண்டியவரான சிதம்பரம் பிள்ளையை விட்டுக் கொடுத்துவிடுவாரா? சிதம்பரம் பிள்ளை செய்வதில் குற்றம் ஒன்றுமில்லை யென்று பேசி பிராது சொல்ல வந்தவர்களை மருட்டிவிட்டார். அவருடன்

பேசப் போனவர்களில் அவருக்குச் சரியான பதில் சொல்லி எதிர்வாதம் புரியத் தைரியமும் சாமர்த்தியமும் உள்ளவர் யாரும் இல்லை. அந்த வண்டியில் இருந்த அத்தனை பேர்களுக்குள்ளும் விஜயராகவாச்சாரியாரை மடக்கக்கூடிய விவாதத் திறமையும் விநயமும் துணிச்சலும் சமயோசித சாதுர்யமும் உள்ளவர் ஒரே ஒருவர்தான் உண்டு. அவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். வக்கீல் தொழிலிலும் விஜயராகவாச்சாரியாருக்கு எதிர்க்கட்சியில் ராஜகோபாலாச்சாரி அமைந்தால்தான் கட்சிக்காரனுக்கும் திருப்தி; கச்சேரியில் காட்சிக்காரர்களுக்கும் திருப்தி. ஒரு வழக்கில் விஜயராகவாச்சாரியார் ஒரு கட்சிக்கு வக்காலத்து வாங்கினுல் உடனே எதிர்க்கட்சிக்காரர்கள் ராஜகோபாலாச்சாரியாரிடம் தான் ஓடுவார்கள். “விஜயராகவாச்சாரியாரும் சேலம் வாசி; ராஜகோபாலாச்சாரியாரும் சேலம் வாசி. விஜயராகவாச்சாரியாரும் பிரபல வக்கீல், ராஜகோபாலாச்சாரியாரும் பிரபல வக்கீல். இவரும் ஐயங்கார், அவரும் ஐயங்கார். இவரும் ஆச்சாரி என்ற பட்டம் படைத்தவர், அவரும் அப்படியே. இவருக்கும் சக்கரவர்த்தி என்ற குடும்பப் பெயர் முன்னுல் உண்டு, அவருக்கும் அதே மாதிரி. இவரும் கெட்டிக்காரர், அவரும் கெட்டிக்காரர். யானைக்கு யானை கை கொடுத்தாற் போல் தான்” என்று ஜனங்கள் பேசிக்கொள்வதுண்டு. இப்படி வார்த்தைகளை அடுக்கிக் காட்டுவதில் மட்டும் தான் இவர்களுக்குள் ஒற்றுமை காணலாம். ஆனுல் இந்த இரண்டு ஆச்சாரியார்களும் இயல்பிலும் தொழிலின் செயல் முறையிலும் முற்றிலும் வேறுபட்டவர்கள்.

விஜயராகவாச்சாரியார் ராஜஸம் மிகுந்தவர்; ராஜகோபாலாச்சாரியார் ஸாத்வீகம் மிகுந்தவர். முன்னவர் ஆர்ப்பாட்டம் உள்ளவர், பின்னவர் அடக்கம் உள்ளவர். மூத்த ஆச்சாரியார் எதிர்க்கட்சி

யைத் தம்முடைய வாதங்களால் ஓங்கியடித்து உட்கார வைத்துவிடுவார். இளைய ஆச்சாரியார் நிதானமாகப் பேசித் திணற வைத்துவிடுவார். விஜய ராகவாச்சாரியார் உரக்கப் பேசுவதனுலும் உருட்டு மருட்டுகளாலும் ஓங்கி மேஜையைத் தட்டி ஓசை யெழுப்புவதாலும் நீதிபதியையும், எதிர்க்கட்சி வக்கீலை யும் நிலைகுலைத்து தன் கட்சிக்குப் பலம் காட்டுவார். ராஜகோபாலாச்சாரியார் வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல சந்தடி செய்யாமல் சலசலப் புக் காட்டாமல் மறுக்க முடியாத நியாயங்களைக் காட்டி மயங்கச் செய்துவிடுவார். விஜயராகவாச் சாரியார் எதிர்க்கட்சிக்காரர் நடுநடுங்கிப் போகும்படி கூட சிற்சில சமயங்களில் கோபமும் கொதிப்புமாகக் குற்றம் சாட்டிப் பேசுவார். ராஜகோபாலாச்சாரியார் கோபிக்கவேண்டிய சமயம் வந்தாலும் கோபக்குறி சிறிதும் காட்டாமல் புன்சிரிப்போடு மோகனுஸ்திரம் விட்டதுபோல முன்னுல் நிற்பவனை முழிக்கச் செய்து விடுவார். விஜயராகவாச்சாரியார் கட்சிக்காரன் கொடுக்கவேண்டிய 'பீஸை' பைசா பாக்கியில்லாமல் கண்டித்துக் கரந்துவிடுவார். ராஜகோபாலாச்சாரியார் கண்டித்துக் கேட்கமாட்டார். கட்சிக்காரன் பேசின 'பீசுக்கு' மேல் அவனே அதிகமாகக் கொடுக்க நினைக்கும்படி அன்பு காட்டுவார். கொடுக்க முடியா தவன் என்று கண்டால் பேசினதற்குக் குறைவாகவும் வாங்கிக்கொண்டு விட்டுவிடுவார். விஜயராகவாச் சாரியாரிடத்தில் பணமில்லாமல் கட்சிக்காரன் பக் கத்தில் போக முடியாது. ராஜகோபாலாச்சாரியா ரிடத்தில் பணமில்லாமலும் பயமின்றிப் போக லாம்........இது சுபாவ வித்தியாசந்தான். விஜயராக வாச்சாரியார் தொழில் முறையில் கண்டிப்பாக இருந் தாரென்பதன்றி, பண ஆசையுள்ளவரென்ருவது, பணத்தை மட்டும் கருதிக் குணத்தைவிட்டவரென்ரு வது சொல்ல முடியாது.

இத்தனையும் எதற்காகச் சொன்னேன் என்றால் மிகப் பெரிய காங்கிரஸ் தலைவருள் ஒருவரான விஜய ராகவாச்சாரியாரைக் கச்சேரியிலாவது வேறிடத்தி லாவது யாராவது வெல்ல முடியுமானால் அது ராஜ கோபாலாச்சாரியார் ஒருவர்தான். விஜயராகவாச் சாரியாரிடத்தில் ராஜகோபாலாச்சாரியார் அபரிமித மான மரியாதை காட்டுவார். எவருக்கும் வணங்காமுடி மன்னரான விஜயராகவாச்சாரியாருக்கு ராஜகோபா லாச்சாரியாரிடத்தில் மட்டும் கொஞ்சம் வணக்கம் வரும்.

கடைசியாக ராஜகோபாலாச்சாரியார் விஜய ராகவாச்சாரியாரிடத்தில் மிகவும் விநயமாகப் பேசிய தின் விளைவாக சிதம்பரம் பிள்ளையின் சண்டித் தனத்தை விட்டுவிடும்படி யோசனை சொல்ல விஜய ராகவாச்சாரியார் சம்மதித்தார். ராஜகோபாலாச்சாரி யார் விஜயராகவாச்சாரியாரிடத்தில் பேசியதன் சாரம், "மெயில் வண்டி நம்முடைய வண்டிக்கு முன்னால் போக வேண்டுமென்பது நியாயம் அல்லதான். அதற்காக நாம் போர் தொடுப்பதில் அநியாயம் இல்லை. ஆனாலும் நம்முடைய சுயராஜ்யத்துக்காக நாம் போராட வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக் கின்றன. நம்முடைய சக்திகளை யெல்லாம் சுதந்தரப் போராட்டத்துக்காகச் சேமிப்பதைவிட்டு இந்தச் சின்னச் சின்ன விஷயங்களில் சிதறவிடக்கூடாது. அன்றியும் இங்கே நாம் இந்தச் சண்டையில் இறங்கி விட்டால் அது முடிவுபெற எவ்வளவு காலம் போகுமோ தெரியாது. கல்கத்தாவிற்குச் சென்று நாம் உடனே கவனிக்க வேண்டிய காங்கிரஸ் வேலைகளெல்லாம் கெட்டுப் போகும்" என்பதுதான்.

உடனே விஜயராகவாச்சாரியார் சிதம்பரம் பிள்ளையை அழைத்துவர ஆள் விட்டார். சிதம்பரம் பிள்ளை வந்தார். விஜயராகவாச்சாரியார் சொன்னார். சிதம்பரம் பிள்ளை கேட்டார். மெயில் முன்னாற்

போயிற்று. நாங்கள் பின்னால் போனோம். இந்த சம்பவத்தில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய ஆண்மையையும், வெகு விரைவில் கட்சி சேர்த்து விடக் கூடிய ஆற்றலையும், எதிர்ப்புகளுக்கு அஞ்சாத துணிச்சலையும், தலைவனுக்கு உடனே தலை வணங்கும் தளபதியின் தன்மையையும் நான் கண்ணாரக் கண்டேன்.

வெள்ளைக்காரரை விரட்டவேண்டும் என்பதில் வெகு மூர்த்தண்யமான முரட்டுத்தனம் காட்டுவாரென்றாலும் சிதம்பரம் பிள்ளை மிகவும் இளகிய மனமும் இனிய குணமும் உள்ளவர். நண்பர்களிடத்தில் வெகு நயமாகவும் நாகரிகமாகவும் நடந்துகொள்வார். அவருடைய வாதங்களில் அற்பத்தனமோ கண்ணியக் குறைவோ காண முடியாது. அவருக்கு அஹிம்சை மார்க்கத்தில் அணுவேனும் நம்பிக்கையில்லை. பகைவனை வெல்லுவதில் பரிசுத்தம் பார்க்க முடியாதென்பதும் போர் மூண்டுவிட்டபின் புண்ணியம், பாவம், பொருமை என்றெல்லாம் ஆலோசிக்க அகத்தியம் இல்லையென்பதும் அவருடைய கொள்கை. போர் தொடுக்கும் காரணம் மட்டும் சரியானதா என்று பார்க்க வேண்டும். அது நியாயமானதென்று நிச்சயித்துவிட்டால் போரின் முறைகளைப்பற்றி நிறை பார்த்துக்கொண்டிருப்பது கோழைத்தனம் என்பதே அவர் கொண்டது. ஆனால் இந்த நம்பிக்கை அவருடைய மனப்பூர்வமானது. மனசில் ஹிம்சையையே மனனம் செய்துகொண்டு வெளியில் அஹிம்சையையே பேசி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உலுத்த குணம் அவரிடத்தில் இல்லவே இல்லை. இந்த விஷயத்தில் நம்மிற் பெரும்பாலோரும் பித்தலாட்டக்காரர்கள் தான் என்று சொன்னால் அது பிழையாகாது.

கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்த பின் நாங்கள் இறங்கியிருந்த இடத்தில் சிதம்பரம் பிள்ளை ஓய்வு

ஒழிச்சலில்லாமல் காந்தியடிகளின் அஹிம்சை வழிகளுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து 'ஓட்' சேகரிக்க முயன்றார். ஆனால் அவருக்குக் கிடைத்த ஆதரவு மிக மிகவும் சொற்பமே. திலகர் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடங்கொடுக்க மாட்டார் என்று நம்பின சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் காந்தியையே ஆதரித்தார்கள். அப்போது காங்கிரசுக்கு மிகச் சிறந்த தலைவர்களாக விளங்கிய அனைவரும் ஏகோபித்து எதிர்த்துப் பேசியும்கூட ஏராளமான ஓட்டுகளால் காந்தியடிகளுடைய தீர்மானம் நிறைவேறியது.

மனித சுபாவத்துக்கு மாறானதென்றும், நடைமுறைக்குச் சாத்தியமானதல்லவென்றும், இன்று நாம் அனுபவத்தில் காண்கிற அந்த அஹிம்சை தீர்மானம் அவ்வளவு அமோகமான ஓட்டுக்களால் நிறைவேறின ரகசியம் என்ன என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

என்னவென்றால், மனித சுபாவத்தில் மறைந்து கிடக்கிற ஆன்ம உணர்ச்சி எப்போதும் அஹிம்சையைத்தான் நாடுகின்றது. ஆனால் மனிதனுடைய நித்திய அனுஷ்டானத்தில் ஒவ்வொரு நிமிஷமும் முன்னணியில் நிற்கிற சரீர உணர்ச்சிகள் அவ்வளவும் ஹிம்சையையே அவலம்பிக்கின்றன. பெரும்பாலும் மக்களுக்குள் மறைந்தும் இருந்துகொண்டிருக்கிற ஆன்ம உணர்ச்சி ஒரு சிறிதும் தலைதூக்க முடியாதபடிதான் மனித சமூகத்தின் சமுதாய வாழ்க்கை நடந்தும் நடத்தப்பட்டும் வருகிறது. எனினும் இந்த ஆன்ம உணர்ச்சி என்பது ஒவ்வொரு மனிதனிடத்திலும் மறைவாகவேனும் இருந்துகொண்டுதான் இருக்கிறதென்பது உண்மையிலும் உண்மை.

அற்புதப் பிறவியான மகாத்மா காந்தியவர்களின் அருந்தவங்களால் அவருக்குண்டான அதிசயிக்கத்

தக்க ஆன்ம சக்தியின் வேகத்தால் எல்லா மனிதரிடத்திலும் இருந்துகொண்டே யிருக்கிற ஆன்ம உணர்ச்சியானது அந்த கல்கத்தா காங்கிரசில் மேலோங்கி நிமிர்ந்து நின்றது. அதனால் தங்களுடைய தினசரி வாழ்க்கையில் அஹிம்சை கொள்கைகளை அனுஷ்டித்தறியாத, அனுஷ்டிக்கவே முடியாத, முழுதும் முரட்டுப் பேர்வழிகளும் கூட காந்தியடிகளின் அஹிம்சை தீர்மானத்தை ஆவேசத்தோடு ஆதரித்தார்கள். அடிக்கடி அப்படி மேலோங்கி வருகின்ற ஆன்ம உணர்ச்சியின் உச்சாடன வேகம் குறைந்து போனதால்தான் இன்றைக்கு அந்த அஹிம்சை மார்க்கத்துக்கு அடிப்படையாக இருந்த காங்கிரஸ்காரர்களிடத்திலும் கலவரங்களைக் காண்கிறோம்.

கலகங்களும் கலவரங்களும் எவ்வளவு ஏற்பட்டாலும் அந்த ஆன்ம உணர்ச்சி அஹிம்சையைத்தான் அவலம்பிக்கும். அந்த ஆன்ம உணர்ச்சி சமுதாய வாழ்க்கையில் அற்றுப் போகாமல் இருக்கச் செய்வது தான் மகாத்மாக்களின் வேலை. அந்த வேலையினால் தான் மனித சமூகம் மிருக வாழ்க்கைக்கு மாறுபட்டதாக இன்னும் இருந்துவருகிறது.

கல்கத்தாவில் காந்தியடிகளின் அஹிம்சை தீர்மானம், நிறைவேறியதிலிருந்து சிதம்பரம் பிள்ளையவர்கள் அரசியல் வாழ்க்கை அடங்கிவிட்டது. காந்தியை எதிர்க்க முடியாதென்று கண்டு ஒதுங்கிவிட்டார்.

சிதம்பரம் பிள்ளையவர்கள் நல்ல தமிழன். தமிழன் என்றால் தமிழ்ப் பண்புகள் நிறைந்தவர். தமிழ்ப் பண்பு என்றால் தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களிலும் தமிழ் மொழி இலக்கியங்களிலும் தமிழன் எங்தெந்த நோக்கங்களைச் சிறந்தனவென்று பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கிறானோ அந்தக் குண விசேஷங்கள் நிறைந்தவர். தமிழ் இலக்கிய நூல்களில் ஆழ்ந்த அறிவுடை

யவர். சுருங்கச் சொன்னால் தமிழனுடைய லட்சியப் பண்புகள் தெய்வ நம்பிக்கை, வீரம், கலை, காதல் என்று சொல்லிவிடலாம். இந்த நான்கு ரஸனைகளும் ஏறத்தாழ, சரிசமானமாகக் கலந்துள்ள பண்புதான் தமிழ்ப் பண்பு. இதில் ஒன்று இரண்டு சற்றே அதிக மாகவோ குறைவாகவோ அவரவர்களுடைய இயல் புக்கு ஏற்றவாறு இருக்கலாம். ஆனால் இந்த நான்கில் ஒன்று இல்லாவிட்டாலும் அது சரியான தமிழ்ப் பண்பு ஆகாது. 'சங்ககால இலக்கியங்கள்' என்ற பெயரில் நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் ஆதியாக 'பாரதி யார் பாட்டுகள்' அந்தமாக எல்லா தமிழ் இலக்கியங் களையும் ஒன்றாகச் சேர்த்து ஊடுருவிப் பார்ப்போமானால் தமிழ் நோக்கம், தமிழ் வாழ்க்கை, தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பு என்பன என்ன என்று எளிதில் விளங்கும். அந்தத் தமிழ்ப் பண்பைத் தமிழ்மொழி நூல்களில் மட்டுமன்றி, தமிழ் நாட்டில் எங்கெங்கும் இன்றளவும் நின்றுளதாகிய பழைய கோயில்களிலும் கோபுரங் களிலும் குளங்களிலும் கூவங்களிலும் கோட்டை களிலும் கொத்தளங்களிலும் இருக்கின்ற சிற்பச் சிலைகளிலும் சித்திரங்களிலும் கல்வெட்டுச் சாதனங் களிலும் அந்தத் தமிழ்ப் பண்பைக் காணலாம். அந்தத் தமிழ்ப் பண்பிற்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வாதுகளும் சாதி சமயச் சண்டைகளும், தமிழன்-அன்னியன் என்ற தர்க்கங்களும் இல்லை. அப்படிப் பட்ட தமிழ்ப் பண்புக்கு அறிகுறியாகச் சிதம்பரம் பிள்ளை திகழ்ந்தார்.

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அந்திய நாட்கள் வறுமையால் வாடிப் போனதாக நேர்ந்தது தமிழ் நாட்டின் தப்பிதமேயாகும். அடிமைத்தனம் மிகுந்து விலங்கினங்கள் வசிக்கும் காடாந்தகாரமாக இருந்த தமிழ் நாட்டில் கல்லையும் முள்ளையும் களைந்து படாத துன்பங்களைப் பட்டுப் பண்படுத்தித் தேசாபிமானம் என்ற விதையை நட்டுப் பயிர் செய்து பாதுகாத்த ஆதி

வேளாளனுகிய சிதம்பரம் பிள்ளை துன்பம் நிறைந்த சிறைவாசத்தையும் கழித்து வெளியே வந்தபோது தமிழ்நாடு அவரைத் தக்கபடி வரவேற்று ஆதரிக்கத் தவறிவிட்டது. இன்றைக்கு அவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று துடிக்கின்ருேம். அந்தமட்டில் அது ஒரு நன்முயற்சிதான் என்ருலும் சிதம்பரம் பிள்ளையை அறிந்த யாரும் அவருடைய கடைசி நாட்கள் கஷ்டங்கள் நிறைந்தனவாக இருந்ததைத் தமிழர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டார்களே என்று கண்ணீர்விட்டுக் கலங்காமல் இருக்க முடியாது.

சுப்ரமண்ய பாரதியார் சோறின்றி வாடிக் கொண்டே பாடிக்கொண்டு மறைந்தார். சுப்ரமண்ய சிவா ஊரூராகச் சென்று பிச்சைக்காரனைப்போல் பிழைத்து மாண்டார். தமிழ் நாட்டுத் தியாகிகளுள் தலைவரான சிதம்பரம் பிள்ளை வறுமையில் வாடியும் ஓசையில்லாமல் தமது கடைசி நாட்களைக் கஷ்டங் களிலேயே கழித்து ஒழித்தார்.

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அருமை பெருமைகளைப் பற்றி அலுப்பில்லாமல் அடிக்கடி பேசி ஆனந்தப் பட்டுக்கொண்டிருந்த நானறிந்த முதல் மனிதன் காலஞ் சென்ற சுப்ரமண்ய சிவா அவர்கள். சிவா அவர்கள் சிதம்பரம் பிள்ளையின் அந்தரங்கங்களை யெல்லாம் நன்ருக அறிந்தவர். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய உண்மையான வரலாறுகளைத் தெரிந்திருந்தவர் சிவாதான். பிள்ளையவர்களுடைய சரித்திரத்தை தாமே எழுதப் போவதாக சிவா அவர்கள் சேலத்தில் என்னிடம் சொன்னுர். அதற்குச் சில பாட்டுக்களையும் அதை அச்சேற்ற வேண்டிய அனுகூலங்களையும் நான் செய்யவேண்டும் என்று சிவா என்னைக் கோரியிருந்தார். அது கைகூடு முன் அவர் காலமாகிவிட்டார். சிவாவின் சிம்ம கர்ஜனை போன்ற பிரசங்கங்களில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய தேசபக்தியைப் பற்றியும் தியாகங்களைப் பற்றியும் அவர் உள்ளம்

உருகிக் கண்ணீர் ததும்பப் பேசிய கட்டுரைகள் இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. சிவாவின் மூச்சுப் போகிறவரையில் சிதம்பரம் பிள்ளை யின் சிறப்புகளைப் பாடிக்கொண்டே பல ஊர்களிலும் அலைந்து திரிந்து கடைசியாக சேலம் ஜில்லாவிலுள்ள பாப்பாரப் பட்டியில் பரகதியடைந்தார். பாப்பாரப் பட்டியில் பாரதமாதாவின் கோயில் கட்ட சிவா அவர்கள் செய்த முயற்சிகளில் அந்த ஆலயத்தில் பல தேச பக்தர்களின் சிலைகளைப் பிரதிஷ்டை செய்ய நினைத்திருந்ததையும் அந்தத் தேச பக்தர்களுக்குள் சிதம்பரம் பிள்ளை முதல் ஸ்தானம் பெற்றிருந்தார் என்பதையும் நான் அறிவேன். பாப்பாரப்பட்டிக்கு நான் ஒரு முறை போயிருந்தபோது அங்கே சுப்ரமண்ய சிவா பாரதமாதா கோவிலைக் கட்டக் குறிப்பிட்டிருந்த இடத்தையும் அந்தக் கோயிலைக் கட்டி முடிக்க வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு அதற்காக வாக்களித்திருந்த அன்பர்களையும் கண் டேன். பாரதமாதா கோயிலுக்காக சிவா வகுத்திருந்த திட்டங்களையும் அதில் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு எவ்வளவு சிறந்த பீடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பதையும் அறிந்தேன். அந்த முயற்சி அவரோடு முடிந்தது.

சிவாவுக்கு அடுத்தபடி சிதம்பரம் பிள்ளைக்குத் தமிழ் நாட்டில் தனிச் சிறப்புக்கள் நடக்கவேண்டு மென்று துடிதுடித்து அலைகிறவர் சிவஞான கிராமணி யார் என்பதுதான் எனக்குத் தெரியும். சென்ற பதினெட்டு ஆண்டுகளாக சிவஞான கிராமணியார் சிதம்பரம் பிள்ளையவர்களுக்குச் சிறப்பான ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று தமிழ் நாட்டின் பலவிடங்களிலும் அவருடைய அபூர்வமான சொல் மாரியைச் சொரிந்து வந்திருக்கிறார். சிதம்பரம் பிள்ளையின் முக உருவச் சிலையை முதன் முதல் சென்னையில் காங்கிரஸ் மண்டபத்தில் திறந்துவைத்து

விழா நடத்திய ஏற்பாடுகளையெல்லாம் செய்தவர் சிவஞான கிராமணியார்தான். அந்த உருவச் சிலையை வைக்க அந்தக் காங்கிரஸ் மண்டபத்தில் ஒரு ஒதுக்கான இடத்தை யாரோ காட்டி விட்டதற்காக கிராமணியார் கடுங் கோபமடைந்து அந்தச் சிலை மண்டப முற்றத்தில் பிரதான இடத்தில் வைக்கப்பட வேண்டுமென்று வாதாடி அப்படியே வைக்கப்பட்டதை யும் நான் அறிவேன்.

'கப்பலோட்டிய தமிழன்' என்ற சிறப்புப் பெயருடன் சிதம்பரம் பிள்ளையின் சரித்திரத்தையும் வெளியிட்டிருக்கிறார். இந்த நூலும் கிராமணியவர் களுக்குச் சிதம்பரம் பிள்ளையவர்கள் மீதுள்ள ஆர் வத்தின் அறிகுறியே ஆகும். சிதம்பரம் பிள்ளையவர் களுடைய சரித்திரத்தை விஸ்தாரமாகத் தெரிந்தவர் கள் யாரும் அதை எழுதவில்லையே என்ற ஆத்திரம், தெரிந்தமட்டிலும் துண்டுதுண்டான நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்து மக்களிடையே பிள்ளையவர்களுடைய நினைவு மங்காமல் இருக்கவேண்டுமென்று சிவஞான கிராமணியார் செய்துள்ள இந்த முயற்சியைத் தமிழ் நாடு மிகவும் நன்றியுடன் வரவேற்கும் என்பது என் நம்பிக்கை. பாரத நாட்டின்மீது சிவஞான கிராமணி யவர்களுக்கு உள்ள பரந்த தேசபக்தி பழுதுபடாமல் தமிழ் மொழியிலும் தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டுத் தலைவர்களிடத்திலும் அவருக்குள்ள தனி பக்தியை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

வாழ்க சிதம்பரம் பிள்ளையவர்களுடைய திரு நாமம்!

வ. உ. சிதம்பரம் பிள்ளை

சிதம்பரம் பிள்ளையென்று பெயர் சொன்னால்—அங்கே
சுதந்தர தீரம் நிற்கும் கண்முன்னால்
விதம்பல கோடி துன்பம் அடைந்திடினும்—நாட்டின்
விடுதலைக் கேயுழைக்கத் திடந்தருமே. (சிதம்)

அடிமை விலங்கையெல்லாம் அறுத்தெறியும்—நல்ல
ஆற்றல் கொடுக்கும் அவன் சரித்திரமே
கொடுமை பலசகிக்கும் குணம்வருமே—நாம்
கோரும் சுதந்தரத்தை மணந்திடுவோம் (சிதம்)

திலக மகரிஷியின் கதைபாடும்—போது
சிதம்பரம் பிள்ளை வந்து சுதிபோடும்
வலது புயமெனவே அவர்க்குதவி—மிக்க
வாழ்த்துக் குரிமைபெற்றான் பெரும்பதவி (சிதம்)

திருக்குறள் படித்திட ஆசைவரின்—புதுச்
சிதம்பரம் பிள்ளைஉரை பேசவரும்
தருக்கிடத் தக்கபெரும் தமிழ்ப்புலமை—கற்றோர்
தலைவணங் கிப்புகழும் தனிநிலைமை (சிதம்)

சுதேசிக் கப்பல்விட்ட துணிகரத்தான்—அதில்
துன்பம் பலசகித்த அணிமனத்தான்
விதேச மோகமெல்லாம் விட்டவனும்—இங்கே
வீர சுதந்தரத்தை நட்டவனும் (சிதம்)

நாட்டின் சுதந்தரமே குறியாக—அதை
நாடி உழைப்பதுவே வெறியாக
வாட்டும் அடக்குமுறை வருந்துயரை—வெல்ல
வாழும் சிதம்பரத்தின் பெரும் பெயராம். (சிதம்)

சிதம்பரம் பிள்ளை நினைவு

மடமையதோ பிறநாட்டார் மயக்கந் தானோ
மக்களெல்லாம் சுதந்தரத்தை மறந்தாராகி
அடிமை இருள் நள்ளிரவாய் அனைத்தும் மூடி
யாரும்தலை நீட்ட வொண்ணு அந்தநாளில்
திடமனத்துச் சிதம்பரப்பேர் பிள்ளையாவார்
செய்திருக்கும் அச்சமற்ற சேவை சொன்னல்
உடல் சிலிர்க்கும் உயிர்நிமிர்ந்து உணர்ச்சி பொங்கும்
உள்ளமெல்லாம் நெக்குநெக்காய் உருகுமன்றோ.

எல்லாரும் தேசபக்தர் இந்தநாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணுத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனுற் சிறையிற் பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைத்தால் வாய்விட்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டி [டேங்கி
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்.

சாதிகுலச் சமயமெலாம் கடந்த தக்கோர்
சமரசமும் சன்மார்க்கம் தழுவும் சான்றோர்
நீதிநெறி மிகப்பயின்ற பலபேர் சேர்ந்து
நிறுவியநம் காங்கிரசை நிதமும் போற்றி
பேதமுற்றுப் பிணங்கிவிட நேர்ந்த போதும்
பெரியசபை அதை இகழ்ந்து பேசாநேசன்
ஓதி அதன் வளர்ச்சியையே விரும்பி வாழ்த்தி
உள்ளளவும் சிதம்பரந்தான் உவப்பான் உள்ளம்.

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம் என்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினால் தலைவ ராகி
காங்கிரஸை நடத்தியதைக் கண்டு நொந்து
தேசநலம் த்யாகமின்றி வருமோ என்று
திலகர்பிரான் செய்தபெரும் கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடா துழைத்தசில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனார் ஒருவராகும்.

உழுதுபல தொழில் செய்து உழைப்போ ரெல்லாம்
உணவும்உடை வீடின்றி உருகி வாட
பழுதுமிக அன்னியர்க்குத் தரக ராகிப்
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்! என்று
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டு
அந்நாளில் சிதம்பரனார் நட்ட வித்தாம்
விழுதுபல விட்டுபெரும் மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் காண்போம்.

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக்கேட்கும்
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணை காட்டும்
குள்ளமென்னும் ஓர் உருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க [நிற்கும்
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்.

திரு. எஸ். சத்தியமூர்த்தி

சத்தியமூர்த்தியவர்களைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் ஒப்பற்ற ஒரு உத்ஸாகமும் உதிப்பதுண்டு. ஆதலின் அவரைப் பற்றி எழுத எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்கள் மிகவும் இனிமையான மனிதர். மனித சமூகத்தின் நல்வாழ்விற்கு அவசிய மான பல துறைகளிலும் நல்ல அறிவாளி. கல்வியில் அளவற்ற ஆர்வமுள்ளவர். கலைகளில் ரஸனை மிகுந்தவர். அன்பர்களுக்கெல்லாம் ஒரு ஆசைப் பொருள். வம்பர்களுக்கெல்லாம் வாயடைக்கும் கருவி. தொண்டர்களின் துணைவர். உழைப்பாளிகளின் ஊக்கம். பிரசங்கத் திறமை அவருக்குப் பிறவிக்குணம். தர்க்கரீதி தவறாத வாதம் அவருடைய தனிச்சிறப்பு.

இவற்றிற்கெல்லாம் மேலாக ஸ்ரீ சத்தியமூர்த்தி யவர்கள் நம்முடைய நாட்டின் மிகச் சிறந்த அரசியல் அறிஞருள் ஒருவர். இந்திய நாட்டின் புராதன இலக் கியங்களிலும் இதர நாடுகளின் நவீன இலக்கியங் களிலும் ஆழ்ந்த ஆராய்ச்சியுள்ளவர். இப்போது உலகத்தில் நடந்துவரும் வெவ்வேறு ஆட்சி முறை களையும் தனித்தனியாக ஆய்ந்தறிந்த அரசியல்வாதி.

சுமார் பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்கள் நாமக்கல்லில் ஒரு பிரம்

மாண்டமான பொதுக்கூட்டத்தில் பேசினர். அந்தக் கூட்டத்திற்கு நான் தலைமை வகிக்க நேர்ந்தது. பிரசங்கியவர்களைப் பற்றிக் கூட்டத்தின் தலைவர் அறிமுகப்படுத்த வேண்டிய முறையில் நான், "நம்முடைய இந்திய நாட்டின் மிகச் சிறந்த அரசியல் ஞானிகளில் ஒருவர் நமது சத்தியமூர்த்தியவர்கள் என்பதை நம்மிற் பலபேர் அறிவார்கள். அது போதாது. நமது சத்தியமூர்த்தி அவர்கள் இந்த உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் இன்றைய தினத்திலும் இதற்கு முன்னுலும் உள்ள அரசியல் அறிவாளி எவருக்கும் எந்த விதத்திலும் குறைந்தவரல்லவென்பதே என்னுடைய துணிபு. ஆதலின் இன்றைக்கு உலகிலுள்ள மிகச் சிறந்த அரசியல்வாதிகளில் ஒருவரான ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்கள் நம்முடைய சுதந்திர முயற்சிகளைப் பற்றி உபதேசிக்க நம்மிடையே வந்திருப்பது, நமக்கு மிகவும் பெருமை தரக் கூடிய விஷயம்...." என்று பேசினேன்.

இந்தப் புகழுரையைக் கேட்டுப் பூரித்துப்போன ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்கள் தம்முடைய பிரசங்கத்தின் ஆரம்பத்தில், "நாமக்கல் மிகவும் விசேஷமான விஷ்ணு ஸ்தலம் என்பதை அறிவேன். அத்துடன் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியவர்களுடைய பிரதிநிதிபோல நம்முடைய சுதந்திரப் போராட்டத்திற்கு வேண்டிய அநேக அருமையான தேசாபிமானப் பாட்டுகளைக் கவனம் செய்து கொடுத்துவரும் கவி ஸ்ரேஷ்டரான நமது ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை வசிக்கும் இடமாக இருப்பதால் இந்த ஊர் என்னைப் போன்ற காங்கிரஸ் ஊழியர்களுக்கு ஒரு க்ஷேத்திரமாக இருக்கின்றது. அப்படிப் பட்ட இந்த ஸ்தலத்தில் அதே கவிஸ்ரேஷ்டர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையவர்களின் அக்ராசனத்தின் கீழ் நான் இன்று பேசக் கிடைத்தது பெரும் பாக்யமென்றே கருதுகின்றேன். கவியவர்களுடயை வாக்கால் நான் உலகத்திலுள்ள சிறந்த அரசியல்

ஞானிகளில் ஒருவன் என்று புகழப் பெற்றதை ஒரு பெரிய சம்பத்தாகவே சந்தோஷிக்கிறேன். வாஸ்தவத்தில் நான் இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு அரசியல் அறிஞனாக இருக்கிறேனோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு அரசியல்வாதி ஆகவேண்டும் என்பது தான் என்னுடைய அபிலாஷை. கவிஞருடைய வாக்குப் பலிக்க வேண்டுமென்று உங்களுடைய ஆசீர்வாதத்தையும் பகவானுடைய அனுக்ரகத்தையும் அவலம்பிக்கின்றேன்....” என்றார்.

என் நினைவில் நெடுநாளாக இருந்து வரும் இந்த நிகழ்ச்சியில் அவர் பிரயோகித்த பதங்களை ஏறத்தாழ அப்படியே எழுதியிருக்கிறேன். இதிலிருந்து ஸ்ரீ சத்திய மூர்த்தி ‘அரசியல் அறிஞன்’ என்று அழைக்கப் படுவதில் எவ்வளவு ஆனந்தம் இருந்தது என்பதை அறியலாம்.

ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு அரசியல் நுணுக்கங்களை ஆராய்ச்சி செய்வதில் இருந்த ஆர்வம் மற்ற எதிலும் இல்லையென்பதை 1932-ம் வருஷம் வேலூர் சிறையில் அவருடன் இருந்தபோதே அறிவேன். வேலூர் சிறையில் அவர் வான்மீக ராமாயணத்தை வெகு பயபக்தியோடு படித்துப் பலபேருக்கு வியாக்யானம் சொல்லி ஸத்காலக்ஷேபம் செய்வதுண்டு. முற்றிலும் பௌராணிக முறையில் ஸ்ரீ ராமஜனனம், சீதா கல்யாணம், பாதுகா பட்டாபிஷேகம், கணையாழி கொடுத்தல் முதலான இடங்களில், வழக்கம் போல விழாக் கொண்டாட்டம் நடத்தி விநியோகங்களும் நடத்தினர். இரண்டொரு சமயம் ஜெயில் ‘சூப்ரண்ட்’ அவர்களுடைய அனுமதியின் பேரில் வேலூர் சிறையில் அப்போதிருந்த ஏ. பி. இரண்டு வகுப்பு அரசியற் கைதிகளும் சேர்ந்து இந்த ராமாயண விழாக் களைக் கொண்டாடினர்கள்.

அதனால் 'பி' வகுப்புக் கைதியாக இருந்த நானும் 'ஏ' வகுப்புக் கைதியாக இருந்த சத்தியமூர்த்தியவர்களுடைய ராமாயணப் பிரசங்கங்களைக் கேட்க சிறையில் அவர் இருந்த பகுதிக்குப் போனதுண்டு. அவருடைய ராமாயணப் பிரசங்கங்களில் அடிக்கடி இடையிடையே அரசியல் பிரச்சினைகளை நுழைத்துச் சிற்சில சமயங்களில் வெகுநேரம் வியாக்யானங்களைச் செய்வார். அங்கங்கே பிரசங்கத்தைக் கேட்பதற்கென்று கூடிய மற்றவர்களுடன் இந்த அரசியல் பிரச்னை பற்றிய விவாதங்களும் நடைபெறும். நேர்ந்த இடங்களிலெல்லாம் சுயராஜ்யத்தைப் பற்றியும், சுதந்திரத்தைப் பற்றியும், சமதர்மத்தைப் பற்றியும் பழைய காலத்துக் கோட்பாடுகளுக்கும் இந்தக் காலத்து எண்ணங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விரிவாக விளக்கி விவாதிப்பதில் ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்களுக்கு வெகு பிரியம்.

சிறைவாசத்துக்குப் பிறகும் அவரைச் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் அவருக்கு மற்ற சிந்தனைகளைக் காட்டிலும் அரசியல் சிந்தனைகளே அதிகம் இருப்பதையும் கண்டேன். சட்டசபை தேர்தல் காலத்தில் அவருடன் சேலம் ஜில்லாவில் சிலநாள் சுற்றுப் பிரயாணம் செய்தேன். அப்போது மோட்டார் வண்டியில் அரசியலைப்பற்றிய பேச்சேதான். மோட்டாரைவிட்டு இறங்கினதும் பொதுக் கூட்டம் இருக்கும். அங்கே அரசியல் பேச்சுதான். பிரசங்கம் முடிந்தவுடன் சாப்பாடு நடக்கும். சாப்பிடும்போது அரசியல் பேச்சுத்தான். சாப்பிட்டு முடிந்ததும் சந்தனம் தாம்பூலம் வழங்கும்போதும், "இப்படிப்பட்ட விருந்தும் சந்தன தாம்பூலங்களும் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் தினம் தினம் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். அது தான் சரியான சுயராஜ்யம்" என்றார். "அப்படிச் செய்ய முடியுமா?" என்று ஒருவர் கேட்டார். உடனே சத்தியமூர்த்தி, "ஏன் முடி

யாது? வெகு சுலபமாகச் செய்யலாம். அதைப்பற்றிய சந்தேகமே வேண்டாம். இப்போதைக்கு நாமெல்லாரும் ஒரு முகமாக நின்று வெள்ளைக்காரன் கையிலுள்ள நம்முடைய சுதந்திரத்தைக் கைப்பற்றுவோம். பிறகு ஒரு முகூர்த்த காலத்துக்குள் நானே அதை நடத்திக் காட்டுகிறேன்" என்று கூசாமல் வஞ்சகம் இல்லாமல் வாக்களித்தார்.

இந்தப் பிரசாரத்துக்காகப் பிரயாணம் செய்த ஒரு நாள் நல்ல வெய்யில் வேளையில் ஒரு குக்கிராமத்தின் சமீபத்தில் சாலையோரத்தில் ஒரு ஆலமரத்தின் அடியில் இளநீர் விற்பதைக் கண்டு ஸ்ரீ சத்திய மூர்த்தி மோட்டாரை நிறுத்தச் சொல்லி இளநீர் சாப்பிட இறங்கினர். இளநீர்க்காரனிடம் சென்றார். எலும்பும் தோலுமாக உட்கார்ந்து கொண்டிருந்த இளநீர்க் கடைக்காரன் இவரைக் கண்டதும் கையிலிருந்த கொடுவாளைக் கீழே வைத்து விட்டுச் சுருட்டி வாரிக் கொண்டு கோவண உடையோடு எழுந்து நின்று கும்பிட்டான். துரும்பாக மெலிந்து துவண்டு வணங்கி, நிற்கக்கூடத் திராணியற்றவன் போன்ற அவனைப் பார்த்ததும் ஸ்ரீ சத்தியமூர்த்தி தமக்கிருந்த தாகத்தையும் மறந்துவிட்டு அவனைப்பற்றியும் அவனுடைய குடும்பத்தைப்பற்றியும் குசலம் விசாரிக்கப் புகுந்தார். அவனுக்கு நான்கு பெண் மக்கள் என்றும் ஆறு ஆண் மக்கள் என்றும், ஒரு சிறு தோட்டமும் அதில் இருபது தென்னை மரங்களும் நாலைந்து மாமரங்களும் அவனுக்குச் சொந்தமென்றும் தெரிய வந்தது. "நீ ஏன் இப்படி வாடிவதங்கி மெலிந்து போயிருக்கிறாய்? ஏதேனும் நோவுண்டா?" என்று சத்தியமூர்த்தி கேட்டார். அதற்கு அந்தக் குடியானவன் "எனக்கு ஒண்ணும் நோவில்லிங்க. நான் இருக்கிறதே இப்படித் தானுங்க" என்றான்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அருகிலிருந்த ஒரு குடிசைக்குள்ளிருந்து, கந்தலாகக்

கிழிந்த ஆடையுடன் இடுப்பில் ஒரு குழந்தையும் பின்னால் இரண்டு மூன்று சிறுவர்களுமாகச் சுமார் முப்பத்தைந்து வயதுள்ள ஒரு பெண் வெளியில் வந்தாள். சத்தியமூர்த்தி அவர்களை ஏற இறங்கப் பார்த்தாள். அவர் பேச்சுகளையும் கொஞ்சம் கேட்டாள். மோட்டார் வண்டியைக் கவனித்தாள். திடுதிடுவென்று ஸ்ரீ சத்திய மூர்த்திக்கு முன்னால் ஓடி கையிலிருந்து குழந்தையை இறக்கிவிட்டு அவருடைய காலில் விழுந்து தேம்பித் தேம்பிஅழ ஆரம்பித்தாள்.

இதைக் கண்டதும் அந்த இளநீர்க்காரன் "சீ ! கழுதே ஏண்டி அழுவுரே? ஒன்னை யாரிங்கே அழைச்சது? போதும் ஏந்திரிச்சி உள்ளே போ" என்று அந்தப் பெண்ணை மிரட்டிவிட்டு சத்தியமூர்த்தியிடம் திரும்பி, "அட கெடக்கிறாங்க சாமி, அந்த அழுமூச்சி மூதேவி எப்பப் பார்த்தாலும் இப்படித் தானுங்க, பகு லண்டிங்க. எந்நேரமும் ஊட்லே இந்த ரகளைதானுங்க" என்று என்னென்னமோ சொன்னான். அவன் பேசினதிலிருந்து அவள் அவனுடைய மனைவி என்பதை அனுமானிக்க முடிந்தது.

காலில் விழுந்த அந்தப் பெண் சிறிது நேரத்துக்குள் எழுந்து நின்று தலைவிரி கோலமாக இரண்டு கைகளையும் ஏந்திக்கொண்டு, "சாமீ! உங்களைப் பார்த்தா சர்க்கார் மனுசர் மாதிரி இருக்குது. கொஞ்சம் புத்தி சொல்லிட்டுப் போங்க சாமி. என்னால் பொறுக்க முடியலிங்கோ. நித்தம் அடியும் ஒதையும் குத்தும் சண்டையுமாயிருக்குது. தோட்டத்திலே வாறது, எளனி வித்து வாறது, என் கூலி, அவன் கூலி, பசங்க ஏதாச்சி வேலை வெட்டி செஞ்சி சம்பாரிச்சா அது, எல்லாத்தையும் அடிச்சி புடுங்கிக் கொண்டுபோய் கள்ளுக்கடையிலே தொலைச்சிபுட்டு எங்களைப் பட்டினி போட்டுப் பளி கொடுக்கிறான் சாமி. கொஞ்சம் சொல்லுங்க சாமி. இனிமேல் என்னால் தாங்க முடியாது. கொளங் குட்டையைப் பார்த்து உளுந்துட

வேண்டியதுதான்" என்று ஓலமிட்டாள். இப்போது புரிந்தது எங்களுக்கு விஷயம்.

உடனே சத்தியமூர்த்தி ஒரு நிமிஷங்கூட யோசிக்காமல், "பயப்படாதே அம்மா, நாங்கள் அதற்காகத் தான்வந்திருக்கிறோம். இன்னும் கொஞ்சநாள் பொறுத்துக்கொள்ளு—குளம்குட்டையில் விழுந்து விடாதே—இதோ காந்தி ராஜ்யம் வரப்போகுது. உன் புருஷன் இனிமேல் கள்ளே குடிக்க முடியாதபடி செய்து வைக்கிறோம். உன்னுடைய குழந்தைகளுக்கெல்லாம் சர்க்கார் செலவில் படிப்புச் சொல்லித்தர ஏற்பாடு செய்கிறோம். உன் நிலத்துக்கு வரியைக் குறைக்கிறோம். உழவுக்கு மாடு கன்று வாங்க வட்டியில்லாமல் கடன் கொடுக்கிறோம். நீ உன் குழந்தை குட்டிகளுடன் நல்ல சோறு உண்டு நல்ல புடவை உடுத்தி சுபிக்ஷமாக இருக்கலாம். உன் புருஷனுக்குக்கூட நல்ல புஷ்டி தரக்கூடிய மருந்து கொடுத்துப் பலவானுக்கி அவன் இனிமேல் உன்னை அடித்து வைது ஹிம்சை செய்யாமல் உன்னோடு சந்தோஷமாகக் குடித்தனம் நடத்தும்படியாகச் செய்து வைக்கிறோம்" என்றார். உடனே அழுது கொண்டிருந்த அவள் தன்னையறியாமல் சிரித்து விட்டாள்.

"எத்தனை நாள் ஆகும் சாமி?" என்றாள்.

"வெகு சீக்கிரத்தில் செய்து வைக்கிறோம், நீ மட்டும் உனக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் சொல்லி மஞ்சள் பெட்டியில் 'ஓட்' போடச் சொல்லு" என்றார்.

இளநீர் குடித்துவிட்டுப் பிரயாணத்தை மீண்டும் தொடங்கினோம். வழி நெடுக அரசியல் பேச்சுதான். எப்படி வரியைக் குறைப்பது எப்படி ஒரு நல்ல அரசாங்கத்தை அமைப்பது .என்பனவற்றைப் பற்றிய சர்ச்சைகள்தான்.

பிரசாரத்துக்காகக் கூட்டப்படும் பொதுக் கூட்டங்களில் அங்கங்கே கூடுகின்ற ஜனங்களின் பக்குவத்

திற்குத் தகுந்தபடி அப்போதைக்கு வேண்டிய விஷயங்களைப் பற்றித்தான் ஸ்ரீசத்தியமூர்த்தி பேசுவார். என்றாலும் தனியே நம்முடன் பேசும்போதெல்லாம் அரசியல் அமைப்புகளைப் பற்றி—அன்னிய நாடுகளில் நடந்துவரும் அநேக முறைகளைப்பற்றிய ஆராய்ச்சி களில்தான் அவருடைய சம்பாஷணைகள் வட்டமிடும்.

எனவே, ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வாழ்க்கையில் அவருடைய செயல்களிலும் சொல்லிலும் சிந்தனை யிலும் மற்ற விசாரங்களைக் காட்டிலும் அரசியல் கவலைகளே அதிகமாக ஆட்சி கொண்டன.

அரசியல் வாதியாக இருப்பதைப் போன்ற அலுப்புத் தரக்கூடிய வேலை வேறு எதுவும் இல்லை யென்பது உலகப் பிரசித்தம். எவ்வளவு அறிவாளி யாக இருந்தாலும் எவ்வளவு உழைப்பாளியாக இருந் தாலும் எவ்வளவு நுணுக்கமான அரசியல் சட்ட திட்டங்களை ஆய்ந்து அளந்து அமைத்துத் தரக்கூடிய ஆற்றலுள்ளவராக இருந்தாலும் வெறும் அரசியல் வாதிகளுக்கு உலகம் போதிய அளவு நன்றி செலுத்து வதில்லை. நல்ல அரசியல் அமைப்புகளையும் ஆட்சி முறைகளையும் சிந்தனை செய்து திட்டப்படுத்துவது எளிதான காரியம் அல்ல. ஒரு கோயில் கட்டிவைத்துப் போன மன்னனை குலதெய்வம் போலக் கும்பிடு வாருண்டு. ஒரு குளம் வெட்டி வைத்த சீமானை அடிக்கடி சிறப்பித்துப் பேசுவாருண்டு. ஆனால் மிகவும் பயன் படக் கூடிய விதத்தில் நீதி செலுத்திய அரசனையோ அவனுடைய அரசியல் திறமையையோ ஜனங்கள் அடிக்கடி நினைப்பதில்லை.

ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்கள் ஒரே ஒரு வருஷம் சென்னைக்கு மேயராக இருந்து பூண்டி நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றி வைத்த சேவையை மக்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். ஆனால் அவர் ஆயுள் முழுவதும் அல்லும் பகலும் அயர்வில்லாது எண்ணி

யெண்ணித் திட்டமிட்டுப் பேசிய அரசியல் வாதங்களை மெச்சிப் பேசுவோர் மிகவும் சிலராகவே இருப்பர். ஏனெனில் மனிதன் முயலும் எல்லா வேலைகளிலும் அரசியல் துறையைப்போல் அவ்வளவு ஏமாற்றம் தரக் கூடிய இடம் வேறு எதுவும் இல்லை. இது உலகத்தி லுள்ள எல்லா அரசியல்வாதிகளுக்கும் பொதுவான விதி. அரசியலில் ஈடுபட்ட சில பேரை ஜனங்கள் அடிக்கடி நினைத்துப் பாராட்டி வந்திருக்கலாம். ஆனால் அது அவர்களுக்கிருந்த வேறு சிறப்புகளுக்காகவே யல்லாமல் அரசியல்வாதி என்பதற்காக அல்ல.

மனிதவர்க்கம் கற்றுக் கொண்டிருக்கிற அநேக வித்தைகளுக்குள் இந்த அரசியல் கலைதான் நம் முடைய கட்டுக்குள் அகப்படாததாகத் தோன்று கிறது. "மனிதனுக்கு மனிதன் சட்ட திட்டங்களை ஏற்படுத்திச் சச்சரவில்லாத சமுதாயத்தை உண் டாக்கி ஆட்சி நடத்துவதுதான் மிகவும் கஷ்டமான வேலை" என்று ஒரு ஆங்கிலேய அறிஞர் சொல்லு கின்றார்.

மானிட ஜாதி தோன்றிய நாள் தொடங்கி, மனித னுக்கு மனிதன் மாச்சரியங்கள் இல்லாமல் கூடுமான வரையில் எல்லாவிதத்திலும் விரும்பத்தக்கதான முறையில் குற்றங்கள் முகவும் குறைவாக உள்ள ஒரு அரசாங்க முறை இதுவரையில் எந்த நாட்டிலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்போதுள்ள எல்லா அரசாட்சி முறைகளும் குறைபாடுள்ளனவாகவே இருக்கின்றன. ஒரு விதத்தில் மிகவும் நல்லதாக இருக்கிற ஒரு அரசியல் முறை வேறு பலவிதங்களில் தீமை விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. பலவிதங் களில் நன்மை பயப்பதாக இருக்கும் ஒரு அரசியல் முறை வேறு ஒரு வழியில் அந்த நன்மைகள் அனைத் தையும் அடித்துவிடக்கூடிய தீமையுள்ளதாக இருக் கிறது. நமது நாட்டுப் புராணங்களிலும் கர்ணபரம்

பரையான கதைகளிலும் எல்லாவிதங்களிலும் மக்களுக்கு ஹிதமான செங்கோல் அரசாட்சி இருந்து வந்ததாகச் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட செங்கோல் ஆட்சிகளைப் பற்றிய புகழுரைகள் தமிழ் இலக்கியங்களில் எத்தனையோ இருக்கின்றன. அந்த அரசியல் முறைகள் எப்படிப்பட்டவை; அவற்றில் என்னென்ன சட்டதிட்டங்கள் இருந்தன என்பன வற்றை அறியக்கூடிய ஆதாரங்கள் ஒன்றுமில்லை.

ஆனால் மனிதனுக்கு மனிதன் மனஸ்தாபமே இல்லாத சுபிட்சமான அரசாட்சி நடந்ததாக மட்டும் சொல்லப்படுகின்றது. இதற்குச் சாட்சியமாக எண்ணிறந்த பாடல்களை எடுத்துக் காட்டலாம். மாதிரிக்காக இரண்டொரு பாட்டுக்களை மட்டும் இங்கே குறிப்பிடுவது மிகையாகாது.

நளன் கதையை வெண்பாக்களால் பாடிய புகழேந்திப் புலவர், நளனுடைய ஆட்சியின் சிறப்பைச் சொல்லும்போது—

> சீத மதிக்குடைக்கீழ் செம்மை அறங்கிடப்பத்
> தாதவிழ்பூந்தாரான் தனிக்காத்தான்—மாதர்
> அருகூட்டும் பைங்கிளியும்ஆடற் பருந்தும்
> ஒரு கூட்டில் வாழ உலகு.

என்கிறார். அதாவது 'குளிர்ச்சியான அவனுடைய ஆட்சியின் கீழ் அறங்களெல்லாம் குறைவின்றி நடந்து வர வெற்றிமாலை அணிந்த அந்த (நளன்) அரசன் ஒப்பற்ற முறையில் குடிகளைக் காத்து வந்தான். அதனால் வீடுகளில் பெண்மணிகள் வளர்க்கும் கிளியும் அந்தக் கிளி இனத்துக்கே இயற்கையான விரோதியாக வேட்டையாடும் பருந்தும்கூட ஒரே கூட்டில் சேர்ந்து வாழும்படியான சமாதானம் அந்நாட்டில் நிலவியிருந்தது.

அறிவிற்குறைந்த பறவைகளும்கூட தங்களுக்கு இயற்கையாக உள்ள மாச்சரியத்தை மறந்து விடும்

படியான தர்மநெறியில் நளன் அரசாண்டான் என்றால் மனிதர்கள் எவ்வளவு மருவிக்கலந்து வாழ்ந்திருப்பார்கள் என்பது சொல்லாமல் சொல்லப்படுகின்றது. கவிச்சக்ரவர்த்தியான கம்பர் அயோத்தியில் தசரதன் நடத்திய ஆட்சி முறையைப் பற்றியும் அறநெறி வழுவாத அந்நாட்டு மக்களின் பண்பைப் பற்றியும் அநேகப் பாடல்களால் வெகு அழகாகச் சொல்லுகின்றார். அந்தப் பாடல்களைக் கொண்டே ஒரு நல்ல அரசாட்சியின் அடையாளங்கள் இன்னின்னவென்று தீர்மானித்து விடலாம். அப்பாட்டுகளிலுள்ள கருத்துக்கள் எக்காலத்துக்கும் உதவக் கூடியனவாக இருக்கின்றன. அந்தப் பாட்டுக்கள் பலவற்றுள் பண்டிதர்கள் அடிக்கடி சொல்லாத ஒரே ஒரு பாட்டை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன். அயோத்தியில்,

அணியிழை மகளிரும் அலங்கல் வீரரும்
தணிவன அறநெறி தணிவி லாதன
மணியினும் பொன்னினும் வளைந்த அல்லது
பணிபிறிது இயன்றன பாங்கும் இல்லையே

அதாவது: "அந்த நாட்டில் உள்ள ஆபரணங்களை அணிந்த பெண்களும் மாலை தரித்த ஆண்களும் தர்மங்களுக்குத் தலை வணங்குவார்களே யல்லாமல் மற்றெதற்கும் வணங்கமாட்டார்கள். மேலும் அவர்கள் மேல் பூட்டப்பட்டுள்ள ஆபரணங்கள் (பணிகள்) உயர்ந்த ரகமான நவரத்தினங்களாலும் பொன்னினாலும் செய்யப்பட்டனவாக இருக்கும். அப்படிப்பட்ட விலையுயர்ந்த ஆபரணங்களை அதிகமாக அணிந்திருப்பதால் அந்தப் பாரத்தினால் உடல் வணங்க நேர்ந்தால் நேரலாமே ஒழிய மற்ற விதத்தில் அவர்கள் எவருக்கும் உடல் வணங்கிப் பணியும்படியான அகத்தியம் இல்லை. அப்படிப் பணியும்படியாக விலங்குகள் பூட்டப்பட்ட மனிதர்களை அங்கே எங்கும் பார்க்க முடியாது. அந்த நாட்டுப் பெண்களும் ஆண்களும் தர்மத்துக்குத்தான் பணிவார்கள். அல்லது ஆபரணங்

களின் பளுவினுல் உடல் வணங்க நேரிடலாம். மற்றப் படி அடிமைகளாகவோ குற்றவாளிகளாகவோ விலங் கிடப்பட்டுப் பணிய வேண்டிய நிலையிலுள்ள மக்களை அங்கே பார்க்க முடியாது. "அடிமைக்குத் தளையில்லை ஆரும் அங்கே அடிமையில்லை" என்று பாரதியார் பாடின கருத்தைக் கம்பர் சொல்லியிருக்கிருர்.

அச்சமும் அடிமைத்தனமும், குற்றவாளிகளும் வழக்கமும் இல்லாமல் அறங்களை மதித்தே அவரவர் வாழ்க்கையை அவரவர் சுதந்தரமாக நடத்திஞர்கள் என்று சொல்லக்கூடிய சமுதாயமும் அரசாட்சியும் அமைந்த நாடு இந்தக் கவிகளின் கற்பனைகளில் தான் காண்கின்ருேமே யல்லாமல் நடைமுறையில் எந்த நாட்டிலும் இருந்திருப்பதாகச் சரித்திரத்தில் காணேம்.

கண்ணை மயக்கும் கானல் நீர்போல் அறிவை மயக்கும் இந்த அரசியல் துறையில் முழுகிக் கிடந்த நமது சத்தியமூர்த்தியவர்களும் அநேக ஏமாற்றங் களுக்கு ஆளானதில் அதிசயம் இல்லை.

காந்தியடிகளின் தலைமையை ஒத்துக்கொண்ட காங்கிரஸ் தீர்மானங்களுக்குச் சிறிதும் துரோகம் செய்யாமல் ஸ்ரீ சத்தியமூர்த்தி உழைத்தார்; என்ரு லும் அவர் காந்தீய வாதியல்ல. சத்தியமூர்த்தி அரசியல் விவகாரங்களை வெறும் அரசியல் பேச்சு களாகவே கருதினவர். காந்தீயம் வெறும் அரசியல் மட்டும் அல்ல. அரசியலோடு ஆன்ம உணர்ச்சிகளும் சேர்ந்தது காந்தீயம். அரசியல் விஷயங்களில் ஆன் மீக தத்துவங்களைக் கலப்பது சரியல்லவென்று நம்பினவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி. ஆன்மீக உணர்ச்சி கள் சேராத எந்த வேலையும் பசையற்ற பாலைவனம் என்பது காந்தீயத்தின் நம்பிக்கை.

ஆன்மீகக் கொள்கைகளை அரசியலில் கலக்கக் கூடாது என்பதை நம்பினவராஞலும் ஸ்ரீசத்தியமூர்த்தி

யவர்கள் தெய்வ பயம் உள்ளவரானதால் காந்தியடிகளின் மிக உன்னதமான தெய்வீக நம்பிக்கைகளை எளிதில் புறக்கணித்துவிட முடியாமல் புழுங்கிக் கொண்டிருப்பார். இந்த இரண்டுவித எண்ணங்களுக்கும் இடையே இருந்துகொண்டு அடிக்கடி ஸ்ரீ சத்திய மூர்த்தியின் உள்ளம் ஊசலாடுவதை நான் நேரில் உணர்ந்திருக்கிறேன்.

ஸ்ரீ சத்தியமூர்த்தியை ஒரு அஞ்சாத நெஞ்சம் படைத்த தீரன் என்றே சொல்லவேண்டும். காந்தியடிகளின் கருத்துக்கும் தம்முடைய கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை மிகவும் தைரியத்துடன் பித்தலாட்டப் பேச்சில்லாமல் வெளியிட்டு விவாதித்த வெகு சில தலைவர்களுக்குள் சத்தியமூர்த்தியும் ஒருவர். பெரும்பாலும் காங்கிரஸ் வாதிகள் காந்திஜீயின் கொள்கைகளை முனை அறியாமல் அப்படியே பின்பற்றி நடப்பவர்களைப் போலப் பாசாங்கு செய்தார்களேயல்லாமல், உண்மையில் அப்படி நடந்து கொள்ளவில்லை. ஆனால் சத்தியமூர்த்தியோ காந்தியாருடன் அடிக்கடி முரண்பட்டு, அந்த முரண்பாட்டை பகிரங்கமாகப் பிரசாரம் செய்தாலுங்கூட காங்கிரஸ் விஷயங்களில் காந்தியடிகள் கிழித்த கோட்டைத் தாண்டினவர் அல்ல. உண்மையில் காந்தீயத்தின் பரம பக்தர்களாகப் பாவனை செய்த பல பேரைக் காட்டிலும் சத்தியமூர்த்தி சிறந்த காந்தீயவாதியாகவே விளங்கினர். ஆரம்ப காலத்தில் அவர் காந்தீயத்துக்கு மாறுபட்டுப் பேசின பேச்சுகளின் தீவிரம் நாளுக்கு நாள் குறைந்து விட்டதென்றே கூறலாம். கடைசியாக அவர் பேசிய பேச்சு ஒன்றில், “தபஸ்விகளைப்பற்றியும் மகரிஷிகளைப் பற்றியும் நான் புத்தகத்தில் படித்ததுண்டு. அவர்களுடைய கதைகளைப்பற்றி நான் ஆச்சரியப்பட்டதும் உண்டு. மகாத்மா காந்தியவர்களின் அபூர்வ முயற்சிகளை நேரிற் கண்ட பிறகுதான் இந்தத் தேசத்தில் மகரிஷிகள் இருந்ததும் வாழ்ந்ததும் உபதேசித்ததும் எல்லாம்

உண்மைதான் என்று நம்பலானேன்'' என்று சொன்னதை நான் கேட்டிருக்கிறேன். ஆதலால் ஸ்ரீ சத்தியமூர்த்திக்குக் காந்தியிடத்தில் அபார பக்தியும் நம்பிக்கையும் உண்டு. ஆனால் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் இலக்கியங்களிலும் 'பார்லிமெண்டரி' ராஜ தந்திர முறைகளிலும் அதிகமாக ஊறிவிட்ட அவருடைய எண்ணங்கள் காந்தீயத்தைப் பற்றி அவரிடத்தில் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணி விட்டது குற்றமாகாது.

ஸ்ரீ சத்தியமூர்த்தியவர்கள் மிகுந்த தன்னம்பிக்கையுள்ள தலைவர். பிறருடைய தூற்றல் போற்றல்களால் மருண்டோ மயங்கியோ போகமாட்டார். அவருடைய பிரசங்கத் திறமை மிக உயர்ந்த தினுசான 'ஆரேடரி' இனத்தைச் சேர்ந்தது. ஒப்பற்ற உழைப்பாளி; எவ்வளவு வேணுமானாலும் பாடுபடுவார். ஆனால் முழு மனதுடன் தான்பட்ட பாட்டிற்குப் பலன்களைக் கணக்குப் பார்ப்பார். வெறும் நிஷ்காம கர்மத்தில் அவருக்கு விருப்பமில்லை என்று கூசாமற் சொல்லி விடலாம்.

"எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"

என்றதைப்போல தானும் தன்னுடன் உழைப்பவர்களும் உடனுக்குடன் அந்த உழைப்பின் பலனை அடைந்து இன்பப்படுவதைப் பார்க்க வேண்டுமென்று துடிப்பார்.

கள்ளுக்கடை மறியல் காலத்தில் நாமக்கல்லில் சுமார் 250 தொண்டர்கள் வெகு கட்டுப்பாடான வேலை செய்தோம். தமிழ் நாட்டில் மிகவும் உயர்ந்த முறையில் மறியல் வேலை செய்த தொண்டர் கூட்டத்தில் நாமக்கல் தொண்டர்படை மிகவும் புகழடைந்தது. அந்தச் சமயத்தில் நாமக்கல்லுக்கு ஒரு மகா நாட்டிற்குக் கொடியேற்று விழாவை நடத்த வந்திருந்த

ஸ்ரீ சத்தியமூர்த்தி, அந்தத் தொண்டர் படையைப் பார்வையிட்டு அவர்களைப் பாராட்டினார். கடைசியாக, "இவ்வளவு அருமையான சேவைகளைச் செய்திருக்கும் நீங்கள் பட்டிருக்கும் பாடுகளுக்கெல்லாம் வெகு சீக்கிரத்தில் பலன் கிடைக்கப்போவது நிச்சயம், இன்னும் கொஞ்ச காலத்தில் நம்முடைய நாட்டை நாமே ஆளப் போகிறோம். அந்தச் சமயத்தில் சுய ராஜ்யத்தை இவ்வளவு சீக்கிரத்தில் சித்திக்கச் செய்த உங்களுக்குத்தான் நான் அக்ர தாம்பூலம் கொடுத்து மாலை சூட்டி மகிழப் போகின்றேன். இங்குள்ள தொண்டர்களின் பெயர்களையெல்லாம் பத்திரமாகப் பதிவு செய்து வைத்திருக்கச்செய்து நமக்கு அதிகாரம் வந்தவுடன் முதலில் உங்களுக்குத்தான் உத்தியோகங்களைக் கொடுத்து நீங்களும் உங்கள் மனைவி மக்களும் சந்தோஷமாக ஜீவனம் செய்யும்படியான ஏற்பாடுகளை நான் செய்யப் போகிறேன். இது வெறும் உபசார வார்த்தையல்ல சத்தியம்" என்று சத்தியமூர்த்தி சொன்னதை இன்றைக்கும் நாமக்கல் தொண்டர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பலாபலன்களை அதி சீக்கிரத்தில் அடைய வேண்டும் என்ற ஆசையைப் பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டேதான் ஸ்ரீ சத்தியமூர்த்தி எந்த வேலையிலும் இறங்குவார். ஆனால் ஏற்றுக்கொண்ட காரியத்தில் கண்ணுங் கருத்துமாக ஓய்வு ஒழிவின்றிக் கொஞ்சங் கூட மனச்சோர்வு இல்லாமல் உழைப்பார்.

சட்டசபை தேர்தல்களில் தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு அமோகமான வெற்றி கிடைத்ததற்குக் காரணம் அவருடைய உழைப்புதான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக எவ்வளவு வேணுமானாலும் தியாகம் செய்யத் தயங்கமாட்டார். சட்டசபை தேர்தலில் தான் நின்றிருக்க வேண்டிய

ஸ்தானத்தை ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியவர்களுக்கு விட்டுவிட்டது அவருடைய தியாக உணர்ச்சிக்கும் அரசியல் தீர்க்க தரிசனத்துக்கும் அடையாளம் என்றால் அது மிகையாகாது.

காந்தீயக் கொள்கையில் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் சொந்த அபிப்பிராயங்கள் எதுவாக இருந்தாலும் காந்தியடிகளின் தலைமையை முழு மனதுடன் ஒப்புக்கொண்டு காங்கிரசின் கட்டுத்திட்டங்களை ஒரு சிறிதும் கடக்காமல் ஸ்ரீ சத்தியமூர்த்தி இந்த நாட்டிற்குச் செய்திருக்கும் அரும் பெரும் சேவைகளைப் பொன் எழுத்துக்களில் பொறித்துப் போற்ற வேண்டும்.

அவர் செய்த எண்ணிறந்த பிரசங்கம் ஒவ்வொன்றும் ஆணித்தரமான அபிப்பிராயங்கள் அடங்கினவை. மறுக்க முடியாத தர்க்க நியாயங்கள் நிறைந்தவை. காந்தீயத்துக்கும் வெறும் அரசியல் வாதத்துக்கும் இடையே அவர் மனதில் இருந்த குழப்பங்கள் எதையும் இந்தப் பேச்சுக்களில் காணமுடியாது. தமக்குள்ள ஐயம் திரிபுகளையெல்லாம் அடக்கிக்கொண்டு நிச்சயமாக நிர்த்தாரணம் செய்யக்கூடிய விஷயங்களை மட்டும்தான் ஸ்ரீசத்தியமூர்த்தி தம்முடைய பிரசங்கங்களில் பேசுவார்.

மிகச் சிறந்த சட்டசபை நிபுணரும் ஜனநாயகவாதியும் உண்மையான தேசபக்தியும் ஓயாத உழைப்பும் அபூர்வ ஆற்றல்களும் உடைய இந்தத் தலைவர் தமது ஐம்பத்தேழாவது பிராயத்திலேயே இறந்துபோக நேரிட்டது தமிழ்நாட்டின் துர்ப்பாக்கியம்தான். அவருடைய பூத உடல் மறைந்து போனாலும் அவருடைய புகழுடம்பு பல இடங்களில் பலவிதமாகச் சிறப்பிக்கப்பட்டு நம்முடைய சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரம் உள்ள வரையில் ஒளியுடன் விளங்கும்.

திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்

'கப்பலோட்டிய தமிழன்' என்று சொன்ன உடனேயே இந்திய நாட்டின் எந்த மூலையிலும், சுதந்தர இயக்கத்தின் சரித்திரத்தை அறிந்த எல்லா ருக்கும் அது தூத்துக்குடி வக்கீல் வ. உ. சிதம்பரம் பிள்ளையைக் குறிப்பது என்று தெரியும். தமிழ் நாட்டில் ஒவ்வொரு குக்கிராமத்திலும் கூட இப்போது எதிரொலி கேட்க எழும்புகிற ஓசை 'கப்பலோட்டிய தமிழன்' என்பது.

9—2—49-ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் டில்லியி லிருந்து அதற்கென்றே தூத்துக்குடி வந்து அந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரம் பிள்ளையின் பெயரால் ஒரு கப்பலை ஓட்டும்படி செய்தார். இந்த மாபெரும் நிகழ்ச்சியைப் பிரசுரித்த தமிழ்ப் பத்தி ரிகைகள் எல்லாம் 'சிதம்பரம் பிள்ளை' என்ற பெயரைக் கூட விட்டுவிட்டு வெறும் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயரைக் கொண்டே அந்நிகழ்ச்சியை சித்தரித்தன.

இந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற சொற் றொடரை முதன் முதல் தமிழர்களுக்குத் தந்த ஏகபோக உரிமையும், பெருமையும், திரு. சிவஞான கிராமணி

AI UNIVERSITY LIBR

யவர்களுக்கே சேர்ந்தது. திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை, அவருடைய அந்திய காலத்தில் அன்ன வஸ்திரத்துக்கும்கூட போதிய ஆதரவின்றி மிகக் கொடிய வறுமையில் வாடி வதங்கி இறந்தார் என்பதை நினைத்து நினைத்து, கதறிக் கண்ணீர் விட்டுக் கலங்கிய ஒரு சில தேசபக்தர்களுள் சிவஞானம் முதன்மை யானவர். "ஐயோ, அருமைப் புலவன் சுப்ரமணிய பாரதியைப் பட்டினி போட்டு பதைக்கச் செய்துவிட்ட பழியை அறிந்திருந்தும் சிதம்பரம் பிள்ளைக்குக்கூட நாம் உதவாமற் போனோமே" என்று சிவஞானம் கலங்கினதை நெடு நாளைக்கு முன்னால் நான் நேரிற் கண்டவன்.

சுப்ரமணிய பாரதி, அவர் கடைசி மூச்சுப் பிரிகிற வரையிலும் அன்னிய ஆட்சியை வெறுத்துப் பேசி பிரிட்டிஷ் அரசாட்சி அவரைப்பற்றி அச்சப்பட வேண்டிய முறையிலேயே வாழ்ந்தார். ஆகையினால் பாரதிக்குப் பகிரங்கமாக உதவி புரிய அறிவாளிகளும் அஞ்சிக் கிடந்தார்கள். மறைமுகமாக உதவிகள் செய் கிறவர்களையும் ரகசியப் போலீசார் கண்காணித்து வந் தார்கள் என்ற காரணமும் இருந்தது.

ஆனால், சிதம்பரம் பிள்ளையின் கடைசி நாட்கள் அரசாங்கத்தார் அவரைப்பற்றி அச்சப்பட வேண்டிய தாக இருக்கவில்லை. கடைசி வரையிலும் சிதம்பரம் பிள்ளையின் சுதந்தர ஆர்வமோ தேசபக்தியோ, காங் கிரஸ் அபிமானமோ குறையவில்லை யென்றாலும் உடல் நிலையின் காரணத்தால் அவர் அரசியல் விஷயங்களிலிருந்து பகிரங்கமாக விலகியிருந்து வெறும் இலக்கியச் சேவையில் மட்டும் ஈடுபட்டிருந் தார். அப்போது அவருக்கு உதவி செய்ய யாரும் பயப்பட்டிருக்க வேண்டியதில்லை. அப்படியிருந்தும் அந்தக் 'கப்பலோட்டிய தமிழனு'க்கு நாம் உதவி செய்யாமல் அவர் உணவுக்கும் உடைக்கும் ஏங்கி உயிர் துறக்க விட்டுவிட்டோமே என்று துடிதுடித்துப்

பேசிவந்த தொண்டர் சிவஞான கிராமணி. உண்மை யாகவே திரு. சிதம்பரம் பிள்ளை தம் அந்திய காலத்தில் அவ்வளவு வறுமையுற்றிருந்தார் என்பதை எல்லாரும் அறியமாட்டார்கள்.

சிதம்பரம் பிள்ளை, அவருடைய கடைசி காலத்தில் எப்படி வறுமையில் நொந்து வாடிக் கிடந்தார் என்பதை தம்முடைய அபூர்வ பேச்சுத் திறமையோடு சிவஞானம் நெடுநாளைக்கு முன் செய்த பிரசங்கங்களைக் கேட்டு நான் சிதம்பரம் பிள்ளையை நினைத்துக் கண்ணீர் சிந்துவதுண்டு.

> 'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரம் பிள்ளைக்கு இன்று ஏற்பட்டுள்ள சிறப்புகளுக்கு முன்னணியாகக் கங்கணங் கட்டிக் கொண்டு உழைத்தவர் திரு. சிவஞான கிராமணியார் என்றால் அது மிகவும் தகும்.

திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையின் திருநாமத்துக்குச் சிறப்புச் செய்தது சிவஞானத்தின் சேவைகளில் மிகவும் குறிப்பிடத் தகுந்தது என்றாலும் சிவஞானத்தைப் பாராட்டவேண்டிய பல்வேறு சிறப்புக்கள் அவருக்குண்டு. கிராமணியவர்கள் நமது நாட்டின் விடுதலைக்காக தம்முடைய சக்திக்கு மீறிய தியாகம் செய்து பல இன்னல்களைச் சகித்த சுதந்தரத் தொண்டர். வெகு அழகான பேச்சாளர்; நல்ல எழுத்தாளர். தமிழ் மொழி, தமிழ்ப் பண்பு, தமிழ் இனம், தமிழ் அரசு என்பனவற்றில் அளவு கடந்த ஆவேசமுள்ளவர். எந்த வேலையில் ஈடுபட்டாலும் ஓய்வு கருதாத உழைப்பாளி.

திரு. சிவஞானம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக காங்கிரஸ் வேலைகளுக்காக எல்லாத் துறைகளிலும் தம்முடைய முழு நேரத்தையும் முழு பலத்தோடு செலவிட்டுச் சேவை செய்பவர். மகாத்மா காந்தியின் இயக்கம் ஆரம்பித்த நாள் முதல் சிவ

ஞானம் சென்னை வட்டத்தில் செய்துள்ள சேவைகள் நாம் மிகவும் நன்றியுடன் ஞாபகத்தில் வைக்க வேண்டியவை. சத்யாக்ரஹப் போராட்டத்தில் சென்னை மக்கள் அவ்வளவு தீவிரங்கொண்டதற்கு திரு. சிவஞானம் சென்னை காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகியாக இருந்து உழைத்த உழைப்பும் செய்த பிரசங்கங்களும்தான் ஜீவநாடிகளாக இருந்தன என்பதை சென்னையின் காங்கிரஸ் சரித்திரம் என்றென்றும் இசைக்கும்.

சத்யாக்கிரகியாக சிவஞானம் பலமுறை சிறை புகுந்தார். ஒவ்வொரு தடவையும் சிறை வாசத்தினால் உண்டான சீர்கேட்டால் கொடிய நோயுற்று வருந்தினர். கடைசித் தடவை அவர் சிறையினின்றும் வெளி வந்தபோது சிவஞானம் இனி ஜீவித்திருக்க முடியாது என்று உறவினரும் நண்பர்களும் ஒப்பாரி பாடிவிட்டார்கள்; ஆனால் எப்படியோ தப்பிப் பிழைத்தார்.

இப்போது நாம் மிகவும் பெருமை கொண்டாடும் படி கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அவர்கள் நெடுங்காலமாக காந்தியின் பரம பக்தருள் ஒருவர். இருந்தும் அவர் வெகு துணிச்சலுடன் காந்திஜிக்கு மிகவும் மாறுபட்ட ஒரு கருத்தை சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னால் வெளியிட்டார். இப்போது நாம் எல்லோருமாகச் சேர்ந்து மனமொப்பி கொடுத்திருக்கிற 'பாக்கிஸ்தானை கொடுத்துத் தொலைப்பதுதான் நல்லது' என்று அப்போதே ராஜாஜி சொன்னார். அதனால் உண்டான குழப்பங்களினால் ராஜாஜி காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து விலகிவிடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. காங்கிரசை விட்டு விலகிய பின்னர் அவர் தம்முடைய கருத்தைப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டார். அதனால் தமிழ்நாட்டு காங்கிரஸ் வாதிகளில் மிகப் பெரும் பகுதியினர் ராஜாஜியை தேசத் துரோகி யென்று அவமதித்துப் பிரசாரம் செய்தார்கள். ரொம்ப நல்ல மனிதர்கள்

என்று கருதப்பட்ட பலபேர் அப்போது ராஜாஜியைப் பற்றிப் பேசிய இகழுரைகள் மிகவும் கொச்சையான வை. காங்கிரஸ் ஸ்தாபனங்களில் செல்வாக்குள்ளவர் களாக இருந்தவர்களில் பெரும்பாலோர் ராஜாஜியை இகழும் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ராஜாஜிக்கு அனுதாபம் காட்டினவர்கள் 'மைனுரிட்டி' தான்.

அந்த 'மைனுரிட்டி'யிலும் பகிரங்கமாக 'ராஜாஜி கட்சியைச் சேர்ந்தவன்' என்று சொன்னவர்கள் கொஞ்சம் பேர்.

அந்த வெகு சிலரிலும் ராஜாஜிக்கு நேர்ந்த அவ மதிப்பு தங்களுக்கும் நேர்மைக்கும் நேரிட்ட அவமதிப்பு என்று நினைத்து அந்த சமயத்தில் ராஜாஜிக்குப் பக்க பலமாக நிற்கவேண்டியது தம் கடன் என்று கருதின வர்கள் அதனிலும் சிலரே.

அந்தச் சிலரிலும் ராஜாஜியின் கௌரவத்தைக் காக்க வேணும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு தங்களுடைய சுக சௌகரியங்களை முற்றிலும் மறந்து ஓடோடியும் உழைத்தவர்கள் மிகவும் சொற்பம்.

அந்தச் சொற்ப எண்ணிக்கையைச் சேர்ந்தவருள் முதன்மையானவர் சிவஞானம்.

அன்னந் தண்ணீரென்ற சிந்தனைகூட இல்லாமல் ஊரூராக அலைந்து திரிந்து சிவஞானம் ராஜாஜியின் பெருமைகளைக் காப்பதற்காகச் செய்த பிரசங்கங்கள் செப்பேட்டில் அல்ல பொன்னேட்டில் பொறிக்கத் தக்கன.

இதில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நல்லவர் கள்; எதைச் சேர்ந்தவர்கள் கெட்டவர்கள் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால், துரும்பு போன்ற உடல் கொண்ட சிவஞானம் இரும்பு போன்ற வலிமை யுடனும், எஃகு போன்ற உறுதியுடனும் தாம் எப்படி

உழைத்தார் என்பதை மட்டும்தான் இங்கே கவனிக்க வேண்டும். ராஜாஜிக்காக சிவஞானம் அவ்வளவு பாடுபட்டது முற்றிலும் தன்னலங் கருதாமல் ஒரு நியாயத்துக்காக மட்டும் செய்தது என்பதை, அப்போது ராஜாஜிக்கு இருந்த மிகவும் பரிதபிக்கத் தகுந்த நிலையில், அவர் பிற்காலத்தில் கவர்னர் ஜெனரல் ஆவார் என்று யாரும் நினைத்திருக்க முடியாது என்ற ஒன்றே உறுதிப் படுத்தும்.

சிவஞான கிராமணியவர்கள் வெகு நல்ல பேச்சாளர். எவ்வளவு நேரம் பேசினாலும் சுவை குறையாது; சுதி மங்காது; சொல் சோர்வுபடாது. எதை எப்படித் தாக்கிப் பேசினாலும் கண்ணியக் குறைவான பதப் பிரயோகங்களைப் பார்க்க முடியாது. எதிர்க் கட்சியினர் நாணுறும்படி அவர்களுடைய குற்றங்களை எடுத்துக் காட்டி இனிய சொற்களால் இடித்துக் கூறுவார். தன்னுடைய கட்சியில் பலக் குறைவிருப்பினும் அவர் பேசுகின்ற அழகில் பலம் பெறும். அவர் பேசவேண்டியதை சிந்தித்துப் பார்க்கக் கூட நேரம் கிடைக்காமல் பேசவேண்டி நேரிட்டாலும் முன்னாலேயே தயார் செய்துவந்த பிரசங்கம்போல தங்கு தடையில்லாமல் திக்கித் திணறாமல் மடை திறந்த வெள்ளம்போல் பேசக்கூடிய மனோதைரியம் நிறைந்தவர்.

சிவஞானம் எழுத்தாளர் என்பதைக் காட்டிலும், பேச்சாளர் என்ற முறையில்தான் தமிழுலகம் அவரை அதிகமாக அறிந்திருக்கிறது. என்றாலும் அவருடைய எழுதும் திறமையும் நல்ல வளமுடையது என்பதையும் பார்த்து வருகிறோம்.

தாய் மொழியாகிய தமிழின்மேல் எல்லையற்ற பற்றுடையவர். ஆனால், தமிழ் மொழியில்தான் எல்லா அறிவும் இருக்கிறதென்றோ, அல்லது தமிழ் மொழியே இந்திய நாட்டின் பொது மொழியாக முடியும் என்றோ

திரு. சிவஞானம் நம்புகின்றவரல்ல. ஆனாலும், இத்தனைச் சிறப்புகளும் தமிழுக்கு வந்து விட்டால் தேவலை என்கிற ஆர்வமுடையவர். ஏனெனில் அறம், காதல், வீரம் என்கிற பண்புகளை தமிழ் இலக்கியங்கள் காட்டும் தனி தினுசில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர். உலகம் முழுதும் மக்கள் சமுதாயம் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகிற முறையில் அமைந்தால் நலம் என்ற நம்பிக்கை யுள்ளவர்.

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்

என்ற பாட்டிலுள்ள கருத்து அப்படியே வாழ்க்கைக்கு வந்துவிடவேணும் என்று விரும்புகிறவர் சிவஞானம். அநீதிகளை அடித்துப் பேசுவதிலும் கொடுங்கோலை வெறுத்துக் கூறுவதிலும் சிவஞானம் வெறிகொண்ட வேகமுள்ளவர்.

அவருடைய பேச்சிலும் எழுத்திலும் போர்க்கோலமும் வீரமுழக்கமும் பொங்கும். என்றாலும், அவருள்ளத்தில் நிரம்பியிருக்கும் தமிழ்ப் பண்பும் காந்தி பக்தியும் முடிவில் சத்தியம் சாந்தத்திலேயே இழுத்து நிறுத்தும். அரசியல் வாதங்களில் சத்தியமும் சாந்தமும் இடையிடையே தடுமாறுவனபோலத் தோன்றினாலும், செயல் முறையைக் குறிக்க வரும்போது கிராமணியாரின் நோக்கம் காந்தியத்தைத் தழுவியே நிற்கும். இதை காந்தியைப் பற்றி அவர் பேசிய பேச்சுகளும் எழுதிய எழுத்துக்களும் காட்டும். காந்தி மகாத்மா சாந்த மூர்த்தியானாலும் கோழையல்ல என்பதை அடிப்படையாகக் கொண்டது சிவஞானத்தின் கொள்கை. ‘முடியுமானால் ஹிம்சை செய்கிறவனுக்கும் திருப்பி ஹிம்சை செய்யாமல் அவன் கொடுமையை எதிர்த்து அன்பு செய். அதனால் நீ

அழிந்து போவதானாலும் சரி. அப்படி ஹிம்சையைச் சகித்துக்கொள்ள முடியாவிட்டாலும் ஒருநாளும் கொடுமைக்குத் தலை வணங்கிப் பணிந்து போகும் கோழையாகாதே" என்பதுதான் காந்தியடிகளின் உபதேசங்களின் மர்மம். இதிலுள்ள பிற்பகுதியைப் பின்பற்றுகிறவர் சிவஞானம். தமிழ் இலக்கியங்களின் கருத்தும் இதுதான் என்பது சிவஞானத்தின் நம்பிக்கை. இதுவேதான் தமிழ்ப் பண்பு என்பது அவருடைய கருத்து என்று நான் கருதுகிறேன்.

அறங்களைக் கடைப்பிடித்துக் காக்கவேண்டும்; அன்புவழி (காதல் வழி) யில் வாழ்க்கை நடத்த வேண்டும்; கொடுமையை எதிர்த்து வீரம் காட்டவேண்டும் என்பதே தமிழ்ப் பண்பு என்பதும், அந்த முறையை வற்புறுத்தக்கூடிய சமுதாயமும் அரசியலும் உலகில் அமையவேணும் என்பதும்தான் சிவஞான கிராமணியவர்களின் ஆசை என்று அவருடைய பேச்சுக்களிலிருந்தும், எழுத்துக்களிலிருந்தும் மட்டுமல்ல; அவருடன் பலமுறை சல்லாபித்திருந்ததிலிருந்தும் நான் அனுமானிக்கிறேன்.

அவருடைய இந்த ஆசையிலிருந்து உதித்தது தான் அவருடைய தனித் 'தமிழரசு' இயக்கம் என்பதும் என்னுடைய அபிப்பிராயம். உலகம் முழுவதிலும் தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்ற பண்புகள் நிரம்பிய சமுதாயமும் அரசியலும் உண்டாவது முடியாத காரியம். என்றாலும், தமிழ் நாட்டில் மட்டுமாவது அப்படி ஒரு முயற்சியைச் செய்யத் தமிழர்களுக்கு ஏகபோக உரிமை இருக்கவேணும் என்று அவர் கோருகிறார் என்பது என் ஊகம்.

சிவஞானம் செய்கிற 'தமிழரசு' முயற்சி சரியா தப்பா, முடியுமா முடியாதா என்பவற்றைப் பற்றித் தீர்ப்புச் சொல்வதோ, கட்சி பேசுவதோ என் வேலையல்ல. 'தமிழரசு' முயற்சி ஒரு அரசியல் விவாதம்.

அது கொடுத்தல்—வாங்குதல் என்பதைப் போன்றது; விவாதம் நிரம்பியது. சுதந்தரமான 'தமிழரசு' வேண்டுமென்று வாதித்தால் தமிழ் நாட்டுக்கு நியாய மான உரிமைகளும் சலுகைகளும் கிடைத்தமட்டில் கிடைக்கட்டுமே என்பது நோக்கமாக இருக்கலாம். ஆதலால், 'தமிழரசு' முயற்சி ஒரு அரசியல் பேச்சு. அதிலிருந்துமட்டும் திரு. சிவஞான கிராமணியாரின் தகுதிகளைத் தீர்மானித்துவிட முடியாது. ஒரு மனித னுடைய உண்மையான பெருமைகளை அவருடைய அரசியல் பேச்சுகளிலும் எழுத்துக்களிலும் இருந்து மட்டும் அளந்துவிட முடியாது. அந்த மனிதருடைய அந்தரங்க வாழ்க்கை, அவர் மனிதனுக்கும் மனிதனுக நடந்துகொள்ளும் மாதிரி, சம்பாதனை முயற்சிகளின் சுத்தம், கொடுத்தல் வாங்குதலில் உள்ள நாணயம், பொது நலத்தைக் கருதும் பொறுப்பு, உண்மைத் தன்மை, உபகார சிந்தை முதலிய பல விஷயங்களையும் சேர்த்துப் பார்த்தால் தான் அவருடைய தகுதி விளங்கும். அந்த முறையில் திரு. சிவஞானம் மேற்சொன்ன எல்லாத் துறைகளி லும் செம்மை காக்கும் சிறப்புள்ளவர். எல்லா விதத் திலும் நம்பத் தகுந்தவர்.

அவருடைய தேசபக்தியும், காந்தீயப் பற்றும், தமிழ் ஆர்வமும், பேச்சுத் திறனும், எழுத்து வல்லமை யும் நெடுநாளைக்கு இந்த நாட்டிற்கு உதவி வரும்படி எல்லா நலன்களும் பெருகவேண்டும் என்று மனமார வாழ்த்தி இறைவனை வணங்குகிறேன்.

MADURAI UNIVERSITY LIBRARY
24 JUN 1970
MADURAI.